விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 03 செவ்வாய்க்கிழமை (17.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 18







சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் திருவுடலுக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ்.மாவட்ட நீதிபதி வசந்த சேனன் ஆகியோர் அஞ்சலி செலுத்துவதையும் அவரின் திருவுடல் தாங்கிய பேழை எடுத்துச் செல்லப்படுவதையும் திருவுடல் அக்கினியுடன் சங்கமமாவதையும் படங்களில் காணலாம்.

# வவுனியாவில் தற்கொலைத் தாக்குதல்

# 12 பொலிஸார் பலி; 23 பேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத் தொகுதிக்கு அருகில் நேற்றுக் காலை 7.10 மணியளவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மூன்று பெண் பொலிஸார் உட்பட பன்னிரண்டு பொலிஸார் கொல்லப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது. இரண்டு பாடசாலை மாணவிகள் அடங்கலாக நான்கு பொதுமக்கள் உட்பட இருபத்திமூன்று பேர் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான அனுசரணையாளர் பணியை தொடர்ந்து வழங்க நோர்வே இணக்கம்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளர்களாகப் பணிபுரிவது என்ற தமது நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லையென நோர்வே மீண்டும் தெரிவித்துள்ளது.

ஒஸ்லோவில் இணங்கப்பட்டமைக்கு அமைய இலங்கையில் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளர்களாகப் பணியாற்ற தயாராகவிருப்பதாக அந்த நாடு கூறியுள்ளது.

இலங்கை தொடர்பான எமது நிலைப்பாடு மாற்றம் பெறவில்லை என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெய்மன்ட் ஜொகன்ஸன் கூறியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அந்த நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவுடன் விமல் வீரவன்ச சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினருக்கும் இடையே நேற்று ஜனாதிபதி மாளிகையில் சிறப்புச் சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பில் தேசிய சுதந்திர முன்னணியின் சார்பில் அதன் தலைவர் விமல் வீரவன்ச, கட்சியின் பொதுச் செயலாளர் நந்தன குணதிலக உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் 5 பேர் கலந்து கொண்டனர்.

2 மணிநேரமாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## பல்லாயிரக் கணக்கானோர் கண்ணீர் மல்க அன்னையின் திருவுடல் தீயுடன் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இறையடி சேர்ந்த தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் திருவுடல் பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்ணீர் மல்க நேற்று மாலை அக்கினியுடன் சங்கமமானது.

தெல்லிப்பழை துர்க்காபுரம் வளாகத்தில் உள்ள யாத்திரிகர் மண்டபத்தில் அன்னையின் திருவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

சமயத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், கல்வியாளர்கள், அரச பணியாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், மாணவர்கள் உட்பட பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு அன்னையின் திருவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மக்களின் அஞ்சலியைத் தொடர்ந்து சிவபூமி அமைப்பாளர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுகன் தலைமையில் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

நல்லை ஆதீன முதல்வர், யாழ்.பல்கலைக்கழகத் துணை (02 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பளத்தை அதிகரிக்கக் கோரி ஜூலை 10 இல் வேலை நிறுத்தம்

### ஜே.வி.பி. அழைப்பு

(கொழும்பு)

சம்பள உயர்வு கோரி எதிர்வரும் 10 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பாரிய வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

ஜே.வி.பியின் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துத் தொழிற்சங்கங்களினதும் ஆதரவு கோரப்பட்டுள்ளது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் லால்காந்த கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விடயத்தில் இந்தியா தலையிடும் காலம் வந்துள்ளது

### சுப்பிரமணிய சுவாமி தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு மற்றும் இறைமையைக் கவனத்தில் கொண்டு பயங்கரவாதத்திற்கு எதிரான இலங்கை முன்னெடுத்திருக்கும் யுத்த நடவடிக்கைக்கும் ஜனநாயகத்தை ஊக்குவிப்பதற்கும் இந்தியா பங்களிப்புச் செலுத்த வேண்டிய காலம் தோன்றியிருப்பதாக இந்தியாவின் முன்னாள் அமைச்சர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியாக பயங்கரவாத அமைப்பாகக் கருதப்படும் விடுதலைப்புலிகள் அமைப்புத் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். இலங்கை (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தபால் அதிபர்களுக்கான நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும்

## பிரதி அஞ்சல்மா அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டதற்கு இணங்க அஞ்சல் அதிபர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுமென தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார் என வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார்.

போட்டிப் பரீட்சையின் மூலம் அஞ்சல் அதிபர்களுக்கான நேர்முப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து அழைக்கப்பட்ட 42 பேருக்குமான நேர்முகப் பரீட்சை எதிர் வரும் 20ஆம் திகதி கொழும்பிலுள்ள அஞ்சல்மா அதிபர் அலுவலகத்தில் நடைபெற இருந்தது.

எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான போக்குவரத்து சிக்கல்களை கருத்தில் கொண்டு அந்த நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு பரீட்சார்த்திகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சு ஊடாக தபால் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்நிலையில் குறித்த நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் எனவும் அதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சின் செயலாளர் தமக்கு அறிவித்துள்ளதாக வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார். (ச-5)

# சிறைச்சாலை வாகனம் மீதான தாக்குதல் குறித்த விசாரணை ஆரம்பம்

(பருத்தித்துறை)

யாழ்.சிறைச்சாலையிலிருந்து பருத்தித்துறை நீதிமன்றத்திற்குச் செல்லும் வழியில் சிறைச்சாலை வாகனம் மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் கே.அரியநாயகத்தினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

துப்பாக்கித் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் நீதிமன்ற தஞ்சம் கோரியிருந்தவர் என்றும், மற்றையவர் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் என்றும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவத்தை விசாரணை செய்த நீதிவான் சிறைச்சாலை வாகனம் நீதிமன்றிற்கு வரும்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் சிறைச்சாலை வாகனம் பருத்தித்துறை வீதியூடாகவே பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும், வாகனம் பயணிக்கும்போது கதவுகள் மூடப்பட்டிருக்க வேண்டும் என்றும் யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகருக்கு பணிப்புரை வழங்கினார்.

வாகனம் எக்காரணம் கொண்டும் இடைவழியில் நிறுத்தப்படக் கூடாது என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

(ச-52)

# புதுக்குடியிருப்பில் விமானக் குண்டுவீச்சு

புதுக்குடியிருப்பு சந்திக்கருகில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் முக்கிய தளம் ஒன்றினை விமானப்படையினர் குண்டு வீசித் தாக்கியுள்ளதாகவும்,நாகர்கோவில் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க பகுதி மீது எம்.ஐ.24 ரக தாக்குதல் உலங்கு வானூர்தி வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது

எனினும் இந்தத் தாக்குதல்கள் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இதுவரை தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இதேவேள்ளை மன்னார்,வவுனியா, வெலிஓயா, யாழ்ப்பாணம் ஆகிய வடபிரதேச போர் முனைகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஞாயிறு அன்றைய நடவடிக்கைகளில் 29 விடுதலைப் புலிகளும் 4 இராணுவத்தினரும் கொல்லப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது. (ச-5)

# துடுப்பாட்டப் போட்டி

(பருத்தித்துறை)

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் சுற்றுப்போட்டி மோதலில் இன்று 17ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் மோதுகின்றது.

நாளை 18ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி ஸ்போட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருநாவலூர் விளையாட்டுக் கழகம் மோதுகின்றது.

(ச-52)

# பிரதேசமட்ட போட்டிகள்

(சங்கானை)

வலிகாமம் மேற்கு கலாசாரப்பேரவை நடாத்தும் பிரதேசமட்ட, தனிஇசை, குழு இசை, சமூகநாடகம், நாட்டுக்கூத்து போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வட்டு.இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டு போட்டிகள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சங்கானை பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (ச-15)

# பல்லாயிரக்கணக்கானோர்...

வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா, பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ்.மாவட்ட அரச அதிபர் க. கணேஷ், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், பேராசிரியர் அ. சண்முகதாஸ் உட்பட பிரமுகர்கள் பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

அஞ்சலி உரையைத் தொடர்ந்து அன்னையின் திருவுடல் தாங்கிய பேழை தெல்லிப்பழை இந்து இளைஞர்களால் எடுத்துச் செல்லப்பட்டு விசேடமாக அமைக்கப்பட்ட தேரில் வைக்கப்பட்டது.

வீதியெங்கும் தோரணங்கள் கட்டப்பட்டுத் தேவாரத் திருமுறைகள் ஒலிக்க அன்னையின் திருவுடல் தாங்கிய தேர் வீதியில் இழுத்துச் செல்லப்பட்டது.

திருவுடல் தாங்கிய தேருக்கு முன்னே அன்னையின் அழகிய திருவுருவப் படம் 'சென்று வருகின்றேன் விடை தாருங்கள்' எனக் கூறுவது போல முன்னே செல்ல தேர் சென்ற வீதியெல்லாம் தெல்லிப்பழை இந்து இளைஞர்கள் செங்கம்பளம் விரித்து அன்னைக்கு இறுதி மரியாதை செலுத்தியமை சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய அந்தத் திருவுடலுக்கு வழங்கப்பட்ட மிகப் பெரும் மரியாதையாகக் கணிக்கப்பட்டது.

கவிதை முழக்கங்கள், புகழாரங்கள், திருமுறைப் பாராயணங்கள்,சோக இசைகள் என வீதியெங்கும் ஒலிக்க அன்னையின் திருவுடல் மாலை 4.30 மணியளவில் தெல்லிப்பழை கட்டுப்பிட்டி மயானத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட சிதையில் வைக்கப்பட்டு சமயக் கிரியைகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து மாலை 4.45 மணியளவில் அன்னையின் திருவுடலுக்கு அவரின் பெறாமகன் தீ மூட்ட சிவத்தமிழ் அன்னை அக்கினியுடன் சங்கமமானார்.

இதேவேளை அன்னைக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று யாழ்.மாவட்ட பாடசாலைகள் அரை நேரத்துடன் மூடப்பட்டதுடன் வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டன.

(ரு)

# பாதுகாப்புப் பிரிவை பிரித்தானியா மூடியது

(கொழும்பு)

இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவை மூடுவதற்கு பிரித்தானிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பில் தூதரகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளதாவது,

பிரித்தானியத் தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவு ஆலோசகரை மீளப்பெறுவதற்கு பிரித்தானிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனினும் இலங்கையுடனான பாதுகாப்பு உறவுகளை பிரித்தானியா பேணி வரும். பாதுகாப்பு பிரிவு அற்ற நிலையில் இந்த உறவுகள் பேணப்படும்.

உலகளாவிய ரீதியில் கவனமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு பின்னரே இந்த முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத்துறையின் செலவீனங்களை குறைக்கும் முகமாகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையுடனான பாதுகாப்பு உறவுகள் தொடரும் என்ற போதிலும் அதனை புதுடில்லியில் உள்ள பிரித்தானியத் தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவு மேற்கொள்ளாது.

இலங்கையின் நிலைமைகளை பிரித்தானியாவின் பாதுகாப்பு அமைச்சு உன்னிப்பாக அவதானித்துவரும்,தேவை ஏற்படின் அங்கு தற்காலிக பாதுகாப்பு பிரிவு அமைக்கப்படுமென்றார்.

(ச-5)

# உயர்தர மாணவர் ஒன்றுகூடல்

(அல்வாய்)

யா/வேலாயுதம் மகாவித்தியாலய க.பொ.த உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு வித்தியாலய அதிபர் ஆ.ஜெகநாதன் தலைமையில் நாளை புதன்கிழமை 10 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரமோகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(ஓ-19)

# சாய்பாபா ஆச்சிரமத்திற்கு தீவிரவாதிகள் மிரட்டல்

(சென்னை)

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் ஆச்சிரமத்துக்கு தீவிரவாதிகள் விடுத்துள்ள மிரட்டலையடுத்து மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் பகவானைச் சந்தித்து அவரது பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

மேற்படி ஆச்சிரமத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி முதல்28ஆம் திகதி வரை இராமாயண நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இதில் பல நாடுகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிலையில் தீவிரவாதிகள் சாய் பாபாவின் ஆச்சிரமத்தை குறி வைத்திருப்பதாக மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து அங்கு பொலிஸ் பாதுகாப்பை அதிகரிக்க மத்திய அரசு முடிபு செய்துள்ளது.

இதன்படி ஆச்சிரமத்தை சுற்றிலும் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். ஆச்சிரமத்துக்கு வரும் பக்தர்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே உட் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் நேற்று மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல், சாய் பாபா ஆச்சிரமத்துக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் சாய்பாபாவை நேரில் சந்தித்து பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விளக்கினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

சாய்பாபாவுக்கு தீவிரவாதிகள் மிரட்டல் இருப்பதால் பாதுகாப்பை அதிகரிக்க முடிபு செய்துள்ளோம். தற்போது சாய் பாபாவுக்கு அளிக்கப்பட்டுவரும் பாதுகாப்பு பற்றி நேரில் ஆய்வு செய்தேன் என்றார்.

(ச-5)

# துர்க்கா துரந்தரிக்கு இதய அஞ்சலி

சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும் பணி ஆற்றிய பெண்ணிற் பெருந்தகை



## அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் மறைவால் ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரின் ஆத்மா இறைபதம் அடைய பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி!

தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம்
உரிமையாளர்களும் ஊழியர்களும்
காரைநகர்.

(1349)

> எதுவும் தானாக வருவதில்லை; நல்லது எதுவும் நிச்சயமாக வருவதில்லை; எல்லா வற்றையும் நாமே கொண்டுவரவேண்டும்.
> –சி.பர்ட்டன்

வலம்புரி

## பொதுமக்களைப் பாதுகாக்கும் உடன்படிக்கை தேவை

புதுக்குடியிருப்பு பகுதியில் நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் வீடுகள், பாடசாலைகள் சேதமடைந்ததுடன் நால்வர் பலியாகியும் 11 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

பொதுவாக வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்த விமானங்கள் நடத்தும் குண்டுவீச்சுத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள், சிறுவர்கள், குழந்தைகள் என பலரும் பலியாகிப்போவது மிகப் பெரும் கொடூரமும், துயரமும் ஆகும்.

இத்தகைய சம்பவங்களால் பொதுமக்கள் விரக்தியின் உச்சக்கட்டத்துக்கு செல்லும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தம் எங்கு நடந்தாலும் பொதுமக்களின் பாதுகாப்பென்பது மிக மிக முக்கியமானதாகும்.

இங்கு பொதுமக்கள் என்பது இனத்தால், மதத்தால், மொழியால் வேறுபடுத்தாமல் மக்கள் தொகுதியைக் குறிப்பதாகும்.

எனவே பொதுமக்கள் எவ்விடத்தில் கொல்லப்பட்டாலும் அது பரிதாபத்துக்குரியதே. எனவே முதலில் யுத்த விமானங்கள் குண்டு வீசுவதும் அதனால் பொதுமக்கள் பலியாகிப்போவதுமான சம்பவங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக இலக்கிடமுடியாத தாக்குதல்கள் அனைத்தும் பொதுமக்களின் உயிர்களை காவு கொள்வதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அத்தகைய இலக்கிட முடியாத தாக்குதலில் முதலிடத்தைப் பெறுவது விமானக்குண்டுவீச்சும் எறிகணைத் தாக்குதல்களுமாகும்.

எனவே இவை முதலில் நிறுத்தப்படவேண்டும். அதேநேரம் யுத்த நிறுத்த உடன்படிக்கையை இருதரப்பும் கைச்சாத்திட்டு அதனை நடைமுறைப் படுத்துவது இன்றைய உடனடித்தேவையாக உள்ளது.

இருந்தும், விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைந்த பின்னரே யுத்த நிறுத்தம் பற்றி பேச முடியும் என அரசு கூறிக்கொள்வது பொருத்துடையதும், சாத்தியப்பாடுடையதுமல்ல.

ஆக, யுத்த நிறுத்த உடன்படிக்கையை செய்து கொள்ள உடன்பாடில்லை எனில் பொதுமக்களை பாதுகாப்பதில்லை என்ற அடிப்படையிலான உடன்பாடொன்றாவது எட்டப்படவேண்டும்.

அத்தகையதோர் உடன்பாடு பொதுமக்களை பாதுகாப்புடன் பொது இடங்களில் தாக்குதல்கள் இடம்பெறுவதையும் தடுப்பதாக இருப்பதோடு, யுத்த முனைகளில் மட்டுமே தாக்குதல் சம்பவங்கள் வரையறுக்கப்படுவதாகவும் இருக்கும்.

இத்தகைய உடன்படிக்கையை செய்து கொள்வதன் மூலம் பொதுமக்களை பாதுகாக்க முடிவதுடன் நிரந்தரமான யுத்த நிறுத்தத்துக்கும் அது வழிவகுக்கும் என நம்பலாம்.

எனவே தற்போதைய அசாதாரண– இறுக்கமான சூழ்நிலையில் பொதுமக்களை பாதுகாப்பதற்கான ஓர் உடன்படிக்கை அவசரமாக – அவசியமாக ஏற்படுத்தப்படவேண்டும்.

# வெள்ளைவானுடன் அரசுக்கோ படையினருக்கோ எந்த தொடர்பும் இல்லையென மறுக்கிறார் பஷில்

## போலிக் களங்கம் கற்பிக்க முயலுவதாகவும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தென்னிலங்கையில் ஆட்கள் காணாமல் போவதற்கும் வெள்ளை வான் கடத்தல் சம்பவங்களுக்கும் அரசாங்கத்திற்கோ அல்லது முப்படையினருக்கோ எவ்வித தொடர்பும் கிடையாதென ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகரும் எம். பி. யுமான பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாதுகாப்புக்கு கருதப்படும் சிலரை பொலிஸார் கைது செய்கின்றனர் என்பது உண்மைதான். இதில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. இவ்வாறு கைதுசெய்யப்படுபவர்கள் மீது உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது. சில சமயங்களில் விசாரணைகளில் தாமதம் ஏற்படுகிறது அல்லது மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்படுகிறார். இதன் போது குறித்த நபர் காணாமல் போனாரென்ற கதை பரப்பப்படுகிறது.

மேலும் பொலிஸார் கைது நடவடிக்கையில் ஈடுபடும்போது அவர் கடத்தப்படுகிறார் என்ற தவறான செய்களும் வெளியிடப்படுகின்றன. சிலர் தமது அரசியல் இருப்புக்காக காணாமல் போனதாக தூக்கிப்பிடிக்கின்றனர். இதனை அரசாங்கம் கூர்ந்து கவனித்து வருகிறது. ஒருவர் கைது செய்யப்பட்டால் அவர் கடத்தப்பட்டாரெனவும் சில மணித்தியாலம் சிலரின் கண்களுக்கு ஒருவர் படாமலிருந்தால் அவர் காணாமல் போனாரெனவும் ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றமை கவலைக்குரியது.

ஊடகங்கள் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு இதுபற்றிய செய்திகளை வெளியிடுமாயின் அது சிறப்பாக அமையும். காணாமல் போதல் மற்றும் ஆட்கடத்தல் வெள்ளை வான் எவ்வகையிலும் அரசாங்கமோ அல்லது முப்படையினரோ தொடர்புபடவில்லை. இதனை நாங்கள் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் நிராகரிக்கின்றோம். தவறான மூலங்களின் அடிப்படையில் பிழையான அறிக்கைகளை வெளியிட வேண்டாமென அரசாங்கத்தின் சார்பில் பொறுப்புடன் கூறுகிறேன்.

காணாமல் போனவர்களை கண்டுபிடிக்க நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி மஹாநாம திலகரட்ன தலைமையிலான குழு ஆட்கடத்தல் மற்றும் காணாமல் போதல் சம்பவங்களில் 90க்கு மேலானவை உண்மைக்குப் புறம்பானவையென கண்டறிந்துள்ளது. காணாமல் போனதாக கூறப்பட்ட சிலர் தற்போது வெளிநாட்டிலுள்ளனர். வீடுகளிலிருந்து கோபித்துக் கொண்டு வெளியேறிய சம்பவங்களும் உண்டு.

வெள்ளை வான் குறித்து பேசப்படுகிறது. பரவலாக அதுபற்றிய செய்திகள் வெளியாகின்றன. எனினும் அந்த வெள்ளைவான் மற்றும் அதன் இலக்கம் பற்றி ஏன் இந்த ஊடகங்களினால் ஆதாரத்துடன் ஒரு செய்தியைத் தானும் இதுவரை வெளியிட முடியவில்லை. ஒரு கமரா காட்சியைதானும் பார்க்க வில்லையே.



எமது அரசாங்கம் உலகில் பலம் பொருந்திய ஒரு பயங்கரவாத அமைப்புடன் போரிடுகிறது. இச்சமயத்தில் எமக்கும் நாட்டு மக்களுக்கும் சில போலிக் களங்கம் கற்பிக்க முயலுகின்றனர். இவ்வாறான நிலையிலும் அரசாங்கம் முப்படையினரை சிறந்த முறையில் வழிநடத்துகிறது. கைதுகள் கூட சட்ட ரீதியாகவே நடைபெறுகிறதென் பதை மீண்டும் உறுதியுடன் கூறுகிறேன் என்றார்.

(அ–5)

# ஆறுமுகன் அரசாளும் கந்தவனக்கோவில்

அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல் பெற்ற யாழ்ப்பாணத்து இரு முருகன் கோவில்கள் நல்லூர் கந்தசுவாமி கோவிலும், பொலிகண்டி கந்தவனக் கல்யாண வேலவ சுவாமி கோவிலுமாகும். இவற்றில் கந்தவனத்தின் மீது "உறவுசிங்கிகள்" எனும் திருப்புகழ் பாடப் பெற்றுள்ளது. அதில் "கந்தசுவாமி கானகம்" எனும் ஸ்தலமுத்திரை வருவது ஈண்டு குறிப்பிட வேண்டியது.

இக் கந்தவனம் இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோற்றம் பெற்ற ஆலயமாக விளங்குகின்றது. முருகப் பெருமான் வள்ளி, தெய்வயானை வீரபாகு தேவர் உட்பட்ட தேவர்கள் ரிஷிகளுடன் கதிர்காமம் செல்லும் நோக்குடன் வேதாரண்யத்திலிருந்து கடல் மார்க்கமாக புறப்பட்டு காங்கேசன்துறையை அடைந்து பின்னர் மீண்டும் கடல் மார்க்கமாக புறப்பட்டு பொலிகண்டியை அடைந்து அங்கே வன்னி வனமாய் இருந்த இடத்தில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கையில் முருகப்பெருமான் கடற்பயணம் செய்த தோஷம் நீங்கும் படியாக பிரமா, விஸ்ணு, இந்திரன் ஆகிய முத்தேவர்கள் மகாபிஷேகம் செய்து வழிபட்ட அற்புத திருத்தலம் என கந்தபுராணத்தின் ஒரு பகுதியின் மொழி பெயர்ப்பாகிய தக்ஷிண கைலாயபுராணம் கூறுகிறது.

இப் பழம் பெருமைபெற்ற இக்கோவிலில் உள்ள பழையவர் என்னும் பழைய மூலமூர்த்தி சோழர் காலத்தில் வடிக்கப்பெற்ற அற்புத திருவடிவம் சோழர் பேரசுக்காலத்தில் தென்னிந்தியாவின் "சிக்கல்" எனும் ஊரில் சிற்ப முனிவர் (சிற்பா சிற்பி) என்னும் சிற்பி முருகப்பெருமானை அழகொழுக கருங்கல்லில் வடித்து இன்புற்று வந்தார். இவரால் ஓர் அழகிய ஆறுமுகப் பொருமானின் திருவுருவம் வடிக்கப் பெற்றதைப்பார்த்து எல்லோரும் ஆனந்தித்தனர். அவ்வேளை அவ்வூரை ஆண்ட முத்தரசன் எனும் சோழ மன்னனும் அகமகிழ்ந்தான். பின்னர் சிறு நோக்கம் கொண்டவனாகி இச் சிறிய சிற்பியால் வேறு விக்கிரகம் செய்தால் தனது ஊரில் உள்ள இவ் அழகிய விக்கிரகத்திற்கு நிகராகிவிடுமே என எண்ணி அச் சிற்பியின் கைவிரலை தானமாகப்பெற்று விட்டான்.

மனந்தரை ஈத சிற்பி எட்டிக்குடி என்னும் ஊரிற்குச் சென்று அங்கு இன்னோர் அழகிய ஆறுமுக சுவாமியை வடித்தார். அதனைக் கண்ட அனைவரும் தம்மை மறந்தனர். அவ் அழகிய ஆறுமுக சுவாமிக்கு கண் திறக்கும் நேரத்தில் மயில் உயிர் பெற்றெழுந்து பறக்க முயலவே அச் சிற்பி உளியினால் எறிந்து மயிலை நிறுத்தினார். இவ் அற்புதத்தை கோள்வியுற்ற மன்னன் தமது ஆணையை மீறி இச் சிற்பி சுவாமியை வடித்ததனால் சிற்ப முனிவரே கண்ணில் கள்ளிப்பாலை ஊற்றச் செய்து கண்ணைக் குருடாக்கிவித்தான். முருகப் பெருமானின் சோதனை என எண்ணிய சிற்ப முனிவர் எண்கண் எனும் தலத்திற்குச் சென்றிருக்கையில் முருகப்பெருமான் கனவில் தோன்றி தம்மை சிலையாக வடிக்குமாறு கூறி மறைந்தார்.

சிற்பி கண்பார்வை இன்றி சிறுமி ஒருத்தியின் துணையுடன் ஆறுமுகப்பெருமானை வடித்தனர். சுவாமிக்கு கண் திறக்கும் நேரத்தில் சிறுமியின் கையில் உளி பட்டு இரத்தம் பீறிட்டுப்பாய்ந்து சிற்ப முனிவரின் கண்ணில் பட்டு கண்பார்வை கிடைக்க பெற்றது. இச் சிற்பி எண்ணமே கண்ணாக கொண்டு ஆறுமுகனை வடித்ததனால் அன்று முதல் அத்தலம் எண்கண் எனப்பெயர் பெற்றது.

இச்சிற்ப முனிவர் கைவிரல் இழந்திருந்த வேளையில் தமது கைக்குழைச்சுக்குள் உளியை வைத்து ஓர் ஆறுமுக சுவாமியை வடித்திருந்தார். அதுவே தற்போது கந்தவனத்தில் வைத்து வழிபடப்படும் பழையவர் .

அதனால்த்தான் இவ் ஆறுமுக சுவாமியை "கைகுழைச்சுக் கலியாண வேலவர்" என்று அழைக்கின்றனர். சிக்கல், எட்டிக்குடி, எண்கண் கந்தவனம் ஆகிய தலங்களில் உள்ள இந்நான்கு ஆறுமுக சுவாமிகள் அமைப்பில் ஒரே உரு உடையவை. இம் மூர்த்திகளில் திருவாசியும் சேர்த்து அமைக்கப் பட்டுள்ளது. அதேபோல் மயிலும் இடது புறம் நோக்கிய வண்ணம் அமைந்துள்ளது கந்தவனத்தில் உள்ள இம் மூர்த்தி முற்காலத்தில் குமாரபுரத்தில் வைத்து வழிபடப்பட்டு பின்னர் போர்த்துக்கேயர் அக்கோவிலை இடிக்க நெல் வியாபாரிகளினால் இவ் விக்கிரகம் கடல்மார்க்கமாக கொண்டுவரப்பட்டு கந்தவனத்தில் மூலவராக வைத்துவழிபடப்பட்டது. சில நூறு வருடங்கட்கு அபிஷேகம் நடைபெறும் போது அபிஷேக குடம் தவறி வீழ்ந்து சுவாமியின் இடது புற வரத கரத்தை சிறு கூறாக்கியது. அதன் பின்னர் இம்மூர்த்தியின் கரம் சீர் செய்யப்பட்டு ஆலய உள் வீதியில் வட புறத்தே வைத்து வழிபட படுகிறது.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

கும்ப கோணத்திலிருந்து இதே அமைப்பை ஒத்த ஆறுமுகப்பெருமான் கொண்டுவரப்பட்டு மூலவராக வைத்து வழிபடப்படுகிறது. இப்பெருமை பெற்ற ஆலத்தில் ஆனி மாத்தில் மகோற்சவமும் கந்த சஷ்டி மகோற்சவமும் சிறப்பாக நடைபெறுகிறது. இங்குமகோற்சவத்திலும் கொடியேற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. அழகிய ஆறுமுகன் தேரிற்கு எழுந்தருளி வருவதை நாம் பார்த்து பல பேறுகள் பெற்றுய்வோமாக.

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

ஓலைச் சுவடிகள் 44

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### வீட்டின் தரிசனம் ஏன் கிழக்கு நோக்கி அல்லது வடக்கு நோக்கி இருக்க வேண்டும்?

புதிய சூழ்நிலைகளில் செய்து முடிப்பது அவ்வளவு சுலபமல்ல என்றாலும் வீடு கட்டும் போது அதன் தரிசனம் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அமைய வேண்டும் என்று வாஸ்து சாஸ்திரம் போதிக்கின்றது.

வீடு எந்த திசையை நோக்கியிருந்தால் என்ன வீடு ஐஸ்வரியத்துடன் இருந்தால் போதாதா என்று பலரும் கேட்கலாம் .ஆனால் தரிசனம் வாஸ்துப் பிரகாரம் இருந்தால் ஐஸ்வரியம் கூடும் என்பது இப்போதைய கண்டுபிடிப்பு.

. நம் நாட்டில் கிடைக்கும் மழை காற்று சூரிய ஒளி என்பவற்றைக் கணக்கிலெடுத்து வாஸ்து சாஸ்திரம் இந்த விதி ஏற்படுத்தியுள்ளது. மேலும் வடக்கு திசை நோக்கி தரிசனம் வைத்து வீடு கட்டினால் கூடுதல் ஐஸ்வரியம் உண்டாகும் என்றும் பதிவு செய்துள்ளது. 'ஒசோன்' படையில் பிளவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்ற கண்டுபிடிப்பு இதனுடன் சம்பந்தப்பட்டது எனக் கூறலாம். இவ்வாறு நிகழும் போது சூரியனிலிருந்து வரும் அல்ட்ரா வயலட் கதிர்கள் நேரடியாக பூமியில் பதியும். இது போன்று தீமை விளைவிக்கும் அல்ட்ரா வயலட் கதிர்கள் நேரடியாக வீட்டின் அங்கணத்தில் பதியும் போதுண்டாகும் தீமைகளை தவிர்க்க வடக்கு தரிசனம் கூடுதல் ஏதுவாயிருக்கும் என்று சாஸ்திரம் கூறுகின்றது. மேலும் வடக்கு அரை கோளத்தில் நம்நாடு இருப்பதால் சூரியன் கூடுதல் காலம் தெற்கு மாறிக்காணப்படும். அதனால் தெற்கு தரிசன முள்ள வீடுகளில் வெப்பம் அதிகமாயிருக்கும்.

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினால் புன்னாலைக்கட்டுவன் கருமாரி அம்மன் ஆலயத்தின் மஹோற்சவ காலங்களில் மாலை 3 மணி தொடக்கம் 4 மணி வரை நடாத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவில் நாளை புதன்கிழமை ''ஆலயங்கள் உணர்த்தும் ஆன்மீகம்'' எனும் விடயத்தில் சிதம்பரநாதன் -சசீவன் சொற்பொழிவாற்றுவார். (அ)

## பதவி உயர்வும் புதிய நியமனமும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பதிவாளர் எஸ். இராஜேஸ்வரன் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்த்தப்பட்டு யாழ். மேல் நீதிமன்றப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர் எஸ். சிவராஜசிங்கம், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பதில் பதிவாளராகப் பொறுப்பேற்றுள்ளார். (ஓ-52)

# பட்டதாரி ஆசிரியர் நேர்முகத் தேர்வுக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கு...

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலை ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இணைத்துக்கொள்வது தொடர்பான நேர்முகத் தேர்வுகள் பற்றி வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட செய்தி வருமாறு,

யாழ். மாவட்டத்தில் நேர்முகத் தேர்வுகள் யாழ். கல்வி வலயத்தில் 30.06.2008 முதல் 04.07.2008 வரை 5 நாட்கள் நடாத்துவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏற்கனவே பரீட்சார்த்திகளின் விபரங்கள் வெளியிடப்பட்டதுடன், தனித்தனியாகக் கடிதங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கும்போது பின்வரும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை எடுத்து வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1.தேசிய அடையாள அட்டை

2. பிறப்புச் சான்றிதழ்

3. பட்டச் சான்றிதழ்

4.பட்டப்படிப்பிற்குரிய பாடங்களில் பெற்ற வகுப்புக்களை (Grade) பிரதிபலிக்கும் அறிக்கை (Statement)

5. ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த பாடத் துறைக்கு ஏற்புடைய மேலதிக சான்றிதழ்கள்.

6.வடமாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவுக்கு அனுப்பிய விண்ணப்பப் படிவத்தின் பிரதி.

7. வட மாகாணத்தின் பிரதேச செயலாளர் பிரிவொன்றில் 16.04.2007 ஆம்திகதிக்கு நேர் முன்னைய 3 ஆண்டுகளில் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் வாக்காளர் இடாப்பின் பிரித்தெடுப்பு. அத்துடன் இவ் விடயம் சார்பாக அப்பகுதி கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தி வழங்கிய கடிதத்தின் மூலப் பிரதி.

நேர்முகத் தேர்வின் போது சமர்ப்பிக்கத் தவறும் சான்றிதழ் தொடர்பாக பின்னர் கவனமெடுக்கப்படமாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டது. (ஓ)

## கைவினைப் பொருள் கண்காட்சியும், விற்பனையும்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் நல்லூர் பிரதேச செயலக தொழிற்றுறைத் திணைக்களமும் இணைந்து யுவதிகளுக்கான சிரட்டை கைப்பணி தொழிற்பயிற்சியினை வழங்கியிருந்தனர். இதன் இறுதி நிகழ்வாக பயனாளிகளிற்கு உபகரணம் சான்றிதழ் வழங்கலும் கண்காட்சி விற்பனையும் இன்று காலை 10.30மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (அ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி

கொக்குவில் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி முதல் 10.30 மணிவரை பொற்பதி பிள்ளையார் கோவிலடி, கொக்குவில் கிழக்கு பிரதேச சபை உப அலுவலகம், கொக்குவில் வளாக வீதி ஆகிய இடங்களிலும் முற்பகல் 10.45 மணிமுதல் 12.15 மணிவரை வைரவர் கோவிலடி, பிறவுண் வீதி, கொக்குவில் கலட்டிச் சந்தி வைரவர் கோவிலடி, கொக்குவில் பிறவுண் வீதி ஆகிய இடங்களிலும் பிற்பகல் 12.30 மணி முதல் 2 மணிவரை அம்மன் கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு இராமகிருஸ்ணா பாடசாலை வீதி, கொக்குவில் கிழக்கு நந்தாவில் வீதி ஆகிய இடங்களிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கான மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் யா.நக்கீரன் அறிவித்துள்ளார். (அ-6)






உலக புத்தகதினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகக் கருத்தரங்கை நூலக அபிவிருத்தி சபை உப செயலர் நவரட்ணசாமி மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், நூலகர் பொ.ரவீந்திரன், வரணி உப அலுவலகப் பொறுப்பாளர் நா.தங்கவேல், எஸ்.சுப்பிரமணியம் ஆகியோர் அருகில் நிற்பதை முதலாவ்து படத்திலும், பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நூல்களின் ஒரு தொகுதியை சேகரிப்புக்குழு உறுப்பினர் சாவகச்சேரி பிரதேச செயலர் தி.சிவராஜலிங்கத்திடம் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சத்திய சாயி சேவா நிலையத்தின் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நாளை புதன் கிழமை அதிகாலை 5.15க்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

அன்று வேதபாராயணம், காயத்திரி மந்திர ஜெபம், நாம அர்ச்சனை, திருநீற்றுப் பதிகம், கோளாறு பதிகம், பஜனை, சொற்பொழிவு ஆகியன இடம்பெறும். (ஓ)

## மாணவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கல்வித் தரத்தை ஊக்குவிக்கும் முகமாக கோப்பாய் கோட்டப் பாடசாலைகளிலும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசித்து வேறு பாடசாலைகளில் கற்ற க.பொ.த உயர்தர 2007 பரீட்சையில் திறமைச் சித்தியெய்திய மாணவர்களை யும், பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய் யப்பட்ட மாணவர்களையும், கோப்பாய் லயன்ஸ் கழகம் கௌரவிக்க தீர்மானித்துள் ளது.

ஆகையால் கௌரவிப்புக்குத் தகுதியான மாணவர்கள் தங்கள் விபரங்களை கோப்பாய் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த பிரதி மாவட்டச் செயலர் லயன் வைத்திய கலாநிதி வை. தியாகராசாவிடம் மெடி எயிட்ஸ் கிளினிக், 689 பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் சமர்ப்பிக்கும் படி கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஏ. சற்குணநாதன் அறிவித்துள்ளார். (ஓ)

## வீதித் தடையிடல்

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட கஸ்தூரியார் வீதி புனரமைப்பு வேலைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டியுள்ளமையால் நாவலர் வீதி சந்திக்கும் ஆஸ்பத்திரி வீதி சந்திக்கும் இடைப்பட்ட பகுதிவீதி இம்மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் யூலை மாதம்18 ஆம் திகதி வரை பொதுமக்கள் போக்குவரத்துக்கு தடைவிதிக்கப்பட்டுமூடப்பட வுள்ளது.

சகல வாகனப் போக்குவரத்துக்களும் கே.கே.எஸ்.வீதி ஊடாக நகரத்துக்கு பயணிப்பதற்கும் மீளவும் ஆஸ்பத்திரி வீதி, கோணாந்தோட்டம் வீதி ஊடாக வெளியறுவதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ்வறிவித்தலை ஏற்று ஒத்துழைப்பு நல்குமாறு யாழ். மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ அறிவித்துள்ளார்.

பாதை தடை செய்யப்படும் விபரம் வருமாறு

| வீதியின் பகுதி | தடைசெய்யும் காலம் | நாட்கள் |
|---|---|---|
| 1.நவீன சந்தைப் பகுதி | 2008.06.19 -2008.06.24 | 06 |
| 2.பொன்னம்பலம் வீதி- செம்மாதர் ஒழுங்கை | 2008.06.24 -2008.06.29 | 06 |
| 3.செம்மாதர் ஒழுங்கை ஸ்ரான்லி வீதிச் சந்தி | 2008.06.29 -2008.07.04 | 06 |
| 4.ஸ்ரான்லி வீதிச் சந்தி - கன்னாதிட்டி வீதி | 2008.07.04 -2008.07.13 | 10 |
| 5. கன்னாதிட்டி வீதி - நாவலர் வீதிச் சந்தி | 2008.07.13 -2008.07.19 | 07 |

## அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்


(யாழ்ப்பாணம்)

கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி. அதிபர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக அதிபர் சேவையைச் சேர்ந்த பயிற்றப்பட்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆசிரிய சேவையில் தரம் 1, தரம் 2-1 ஐச் சேர்ந்த பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களும், ஆசிரிய ஆலோசகர்களும் விண்ணப்பிக்கலாம்.

தீவக கல்வி வலயத்தில் கடமையாற்றுவோருக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

அதிபர் சேவையிலுள்ளவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து ஆசிரிய சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள் ளப்படும் என்றும் விண்ணப்பங்களை யூலை மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் தீவக வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்புமாறும் தீவக வயலக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஓ)



சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும்முகமாக ஜே/258, ஜே/260 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த இருபாலை கிழக்கு மாதர் அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த 50 பயனாளிகளுக்கு ரூ 20,000 வீதம் கோழி வளர்ப்பு ,மாடு வளர்ப்பு போன்ற முயற்சிகளுக்காக இலங்கை வங்கி திருநெல்வேலிக்கிளை, அதன் கோப்பாயிலுள்ள நீடித்த கரும பீடத்தின் உதவியுடன் வழங்கியது. இருபாலையிலுள்ள மாதர் அபிவிருத்திச் சங்க அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளையின் முகாமையாளர் இ.பிறேமராஜன் பயனாளி ஒருவருக்கு பணம் வழங்குவதையும், அருகில் ஏனைய வங்கி ஊழியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். இக் கடனானது இலங்கை வங்கியின் குறைந்த வட்டி வீதத்தைக் கொண்ட விவசாய நவோதய கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.




# யாழ் செய்திகள்

## நூல் அறிமுக அரங்கு

த.ஆனந்தமயிலின் ''எழுது வினைஞனின் டயறி'' சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக விழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் எழுத்தாளர் குப்பிழான ஐ.சண்முகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அறிமுகவுரையை எழுத்தாளரும் விமர்சகருமான அ.யேசுராசாவும், மதிப்பீட்டுரையை நுண்கலைத்துறை விரிவுரையாளர் பா. அகிலன், எழுத்தாளர் மு.அநாதரட்சகன், தமிழ்த்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ஓ)

## வலுவூட்டல் செயலமர்வுகள்

(பருத்தித்துறை)


சிறுவர் செயற்திட்டத்தின் கீழ் வடமராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வலுவூட்டல் செயலமர்வுகளை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடாத்தவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 20 ஆம்திகதி வெள்ளிக்கிழமை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கேட்போர் கூடத்திலும், 21,22 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் இவ் வலுவூட்டல் செயலமர்வுகள் நடைபெறவுள்ளதாகவும் இச் செயலமர்வுகளில் பருத்தித்துறைப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களையும், கரவெட்டிப் பிரதேச உதவி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-52)


## யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கிழக்கு நல்லூர்

# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில்

# இரதோற்சவ சிறப்பு மலர் – 2008







### மஹோற்சவ பிரதமகுருவின் ஆசிச் செய்தி



யர்ழ்ப்பாணம் திருநகரை அணி செய்யும் ஆலயங்களுள் பூர்வீக சரித்திரப் பெருமைகளோடு பிரசித்தி பெற்று விளங்கும் ஆலயம் வண்ணை வீரமாகாளியம்பாளின் ஆலயம் ஆகும்.

மக்களை வாழ்வாங்கு வாழ வைக்கும் தெய்வீக நிலையங்களே ஆலயங்களாகும். மலர்ந்துள்ள சர்வதாரி வருஷத்திலே வருடாந்த இரதோற்சவமான இந் நன் நாளிலே தேரேறிவரும் அன்னையை காண ஓடோடி வரும் அடியவர்களின் அல்லல்களை அகற்றி ஆறுதல் அளிக்க வேண்டியும், அருள்மாரி பொழிந்து குளிரவைக்கும் அன்னையவள் எமது நாட்டிலே என்றும் நிலைத்திட்ட சாந்தியும் சமாதானமும் வேண்டி அம்பாளை பிராத்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

"நம்பி வந்தோம் அம்பிகையே நல்ல - வரமருள்வாய்
தும்பிமுகனும் தம்பியும் கூடவர தேரில்மர்ந்து
அருட்காட்சி தாராய்"

"சிவாச்சார்ய இளவரசு"
சிவஸ்ரீ. சிவ. கமல்ராஜ் குருக்கள்,
பிரதமகுரு வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்.

### நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி



அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாக விளங்குகின்ற அம்பிகை வீரமாகாளி என் றவீரத் திரு நாமத்துடன் வண்ணைநல்லூரில் அருள்ஆட்சி செய்ய அடியார் எல்லோரும் மெய் அன்போடு ஆலயம்வந்து அன்னையை வழி பட்டு விரும்பிய சித்திகளெல்லாம் பெற்றவண்ணம் உள்ளனர்.

அன்னை தேரேறி வீதியுலா வலம் வரும் வேளை அடியவர் களின் வினைகளெல்லாம் நீக்கி விடும் என்பதில் ஐய மில்லை. இன்று அம்பிகை அழ கிய சித்திரத்தேரில் ஆரோ கணித்து வருகின்ற காட்சியை காணக் கண் கோடி வேண்டும். தேரேறிவரும் அன்னையை தரிசித்து எல்லோரின் பழ வினைகள் யாவும் நீக்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ அன்னையை பிரார் த்திக் கின் றேன். இந்நாட்டில் வாழும் அனைவரும் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ அம் பாளை பிரார்த்தித்து நல் லாசி கூறுகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள் , நல்லை ஆதினம்

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் சிறுவர்களிற்கான
சைக்கிள்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
இல-69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே. 021 222 2813

**அம்பாள் ஹாட்வெயார்**
113, பருத்தித்துறைவீதி , நல்லூர்.

**நாவலர் இன்ஸ்ரிரியூட்**
**NAVALAR INSTITUTE**
(கல்வி உலகின் கலங்கரை விளக்கு)
தலைமை –ஆனைபந்தி வீதி , யாழ்ப்பாணம்
கிளை–திருநெல்வேலி ,யாழ்ப்பாணம்.

**அம்பாள் மரக்காலை**
Amdal Timber Depot
No-261, Pointpedro Road
Nallur
261.பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**வெங்கடேஸ்வரா**
துவிச்சக்கரவண்டிகள் ,
அவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
அனைத்தையும் பெற்றிட நாடுங்கள்
இல-125A,127,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கிருஷ்ணா அடைவு கடை**
KRISHANA POWN BROKER
370,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 5046

**சந்நதி முருகன்**
**வேக்சொப் அன் சேவிஸ்**
டேவிட்பீரிஸ் மோட்டார் கொம்பனி லிமிட்டெட்டின்
"அதி காரம் பெற்ற சேவை முகவர்" மோட்டார் சைக்கிள்
ஸ்பெயார் பாட்ஸ், ரான்ஸ்போட் அன் ரவல்ஸ்
தொ.பே. 222 8076
222 5202
241,பருத்தித்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

**யோகிகோம் சயன்ஸ் அக்கடமி**
YOGI HOME SCIENCE ACCADAMY
**அழகுக் கலை பயிற்சியகம்**
இல.75,அம்மன்வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

**ஜெனன் பனை மரக்காலை**
உரிமையாளர் : –ந. மதியழகன்(கண்ணன்)
140,பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# நயினை நாகபூஷணி அம்ம
# 2008.



பாடசாலை உபகரணங்கள், துவிச்சக்கரவண்டி
அதன் உதிரிப்பாகங்கள் மற்றும் மோட்டார் வாகன
ரயர், ரியூப் மற்றும் சகல பொருட்களும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**அற்புதா ரேடிங்கொம்பனி**

198 (404 - A) ஆஸ்பத்திரி வீதி,
(H.N.B அருகில்.)
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ நதியா நகை மாளிகை**

இல.1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**நியூ பிரியங்கா ஜுவலர்ஸ்**

2-G, Stanly
Road,
Jaffna.

**ஆல் சிலோன்
டிஸ்ரிபியூட்டர்ஸ்**
(விலைக் கழிவுடன்
புத்தகங்கள் வழங்கப்படும்)
இல. 212, 214 K.K.S
Road, Jaffna.

அனைத்து வகை புடவைகளையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்

**சிமாட்டி புடவைக் கடல்**

இல.15, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**GLOBAL**
Multi Trade Centre
(Sports, Electronics, Fancy, Stationery, Shoes)
College Road, Jaffna Hindu College
Ground Junction, Jaffna.
T.P : 0777 179461

# ன் இரதோற்சவ சிறப்புமலர்

# .06.17


## சரவணபவன் சைவ உணவகம்

195, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

T.P No :- 9559





## சாரங்கா நகைமாடம்

157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P 021 2226972

பலசரக்குப் பொருட்களை நியாய விலையில் பெற
நாடவேண்டிய ஸ்தாபனம்

## க.கு.கந்தையாபிள்ளை அன்சன்ஸ்

## பல்பொருள் வாணிபம்

இல.318 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நவீன வடிவமைப்பில் தங்க நகைகளை
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

## கலைவாணி நகைமாளிகை

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சகல வித பலசரக்குப் பொருட்களையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## றூபா பன்முக வர்த்தகம்

இல-104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## சிறீ மீனாட்சி தங்கமாளிகை

187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P 222 6109

## மைதிலி நகைமாடம்

89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உ
குமரர் ஜெயம்

# நீர்வேலி
# அருள்வளர் ஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி திருக்கோயில்
## தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்

## 17.06.2008



### ஆலயப் பிரதம குருவின் ஆசியுரை

"தீயவை புரிந்தாரேனும்
குமரவேள் திருமுன்
உற்றால் தூயவராகி
மேலைத் தொல்கதி
அடைவர்"

என்பது கந்தபுராணம் கூறும் செய்தி. பஞ்ச பூதங்களும் அகில உலகமும் அவனுள் அடக்கம். இன்றைய இடர்மிக்க அசாதாரணமான சூழலில் நமக்குத் துணை அவனடி மட்டுமே. இந்த வகையில் இன்றைய தினம் இவ்வுலகில் அவதரித்த, இக – சுகம் தரும் வள்ளியம்மையுடனும் பரலோக சுகத்தைக் கொடுக்கும் தேவசேனாவுடனும் அழகன் கதிர்காமசுவாமி ஆழமான, அகன்ற, கூர்மையான அறிவின் உருவெடுத்த வேலாயுதத்தை கரத்தில் தாங்கி தேரேறி வருகின்ற வேளையில் தரிசித்து அவனடி போற்றி அவனருள் பெறுவோமாக.

நம் வாழ்வின் உய்வுக்காக அவதரித்த எம் பெருமான் நம் மண்ணில் சாந்தியும் சமாதானமும் ஏற்படுத்தப் பிரார்த்திப்போம்.

கு.தியாகராஜக்குருக்கள் (நீர்வைமணி)
ஆலயப் பிரதமகுரு

இன்று தேர்த்திருவிழா

காலை 8.00 மணி
வசந்த மண்டபப் பூஜை

காலை 9.00 மணி
சுவாமி இரத ஆரோகணம்

காலை 11.00 மணி
சுவாமி இரத அவரோகணம் தொடர்ந்து பிராயச் சித்த அபிஷேகம்

## செல்லக் கதிர்காம தேவஸ்தானம்

**அமைவிடம்**
யாழ்ப்பாணத்து நீர்வேலியூரில் நீர்வேலி (சுன்னாகம் வீதிக்கு சமீபமாக உள்ளது.)

**பெயர்க் காரணம்**
அன்பும் (காமமும்) அருளொளியும் (கதிரும்) கொண்ட கதிர்காமம் போன்ற பரம பவித்திரமான தலம்

**மூலவர்**
ஸ்ரீசெல்லக் கதிர்காமசுவாமி, சுந்தரராஜர்

**திருநிலை**
யந்திரத்துடன் கூடிய வேல் வடிவாக (அருவுருவாக) கிழக்கு நோக்கிய நிலை.

**தேவியர்**
சுந்தரவல்லி, அமிர்தவல்லி

**தீர்த்தம்**
குமார புஷ்கரணி

**விருட்சம்**
நெல்லி

**பெருவிழா**
ஆனி மகோற்சவம், கந்த ஷஷ்டிப் பெருவிழா

## ஆலய வரலாறு

இலங்கையின் மிகப் புகழ் பூத்த யாத்திரை ஸ்தலமாக "கதிர்காமம்" அன்று தொட்டுத் திகழ்ந்து வந்திருக்கிறது. கந்தபுராணத்தில் "ஹேமகூடம்" என்று இது புகழப்படுகிறது. இராம தூதுவனான அனுமன் சீதையைத்தேடி இலங்கை வந்தபோது கதிரமலை முருகனை வழிபட்டு வந்த காரியம் பூரண சித்தியடையப் பெற்றான் என்பது ஐதீகம். திருப்புகழ் பாமாலை சூட்டப்பெற்ற மேற்படி கதிர்காம முருகன் மீது ஈடுபாடுமிக்க அடியவர்கள் உலகெங்கும் பரவி வாழ்கின்றனர். அவர்கள் நவீன வசதிகளற்ற அக்காலத்தில் பாத யாத்திரையாக "கதிர்காமம்" வந்து தரிசனம் செய்து பேரருள் பெறுவது வழக்கம்

இந்த வகையில் "நீர்வேலி" கிராமத்திலிருந்தும் செல்லாச்சி அம்மையார், சின்னாச்சி அம்மையார் எனுமிரு துறவறம் பேணிய தூய முருகன் அடியார்கள் கதிர்காமத்திற்கு பாத யாத்திரைசெய்து வந்துள்ளனர். ஐதீக கர்ண பரம்பரைக் கதையின் படி அம்மையார்களுடைய குடிசை அமைந்திருந்த வளவில் இருந்த பலாமரத்தின்முதற் பழத்தை கதிர்காமம் கொண்டு சென்று கதிர்வேலனுக்கு படையல் செய்வதாக நேர்த்தி வைத்திருந்தனர். ஆனால் முருகனின் விளையாட்டால் திடீரென பலாப்பழம் பழுத்து மணம் கமழ்ந்தது. திகைத்து நின்ற அம்மையார் பழத்தை வெட்டி எடுத்தார். மறுகணம்பல மைல் தொலைவில்... எங்கு நீர்வேலி? எங்கு கதிர்காமம்? ஆனால் இவரோ கந்தன் விளையாட்டால் கதிர்காமத்தில் நின்றார். "மணிதரளம் வீடு அணி அருவி சூழும் மாணிக்க கங்கையில்" மூழ்கி பலாப்பழத்தை நிவேதித்தார். மறுகணம் நீர்வேலியூரார் வியக்க ஈரவாடையுடன் நீர்வேலியில் நின்றார். அப்போது கொண்டு வந்த வேலும் யந்திரமுமே கோயிலுருவாக காரணமானது. இரு தபஸ்வினியரும் இறைவனின் ஆணைப்படி ஆமலக விருட்சம் எனும் நெல்லி மரவடியில் தம் குடிசைக்கு அருகில் சிறு குடிலிட்டு மேற்படி சுப்பிரமணிய யந்திரத்தையும், வேலையும் பிரதிட்டை செய்து வழிபட்டனர். பின் 1930ல் ஆகம விதிப்படி கருவறை முதலியன கட்டப்பெற்று பிரம்ம ஸ்ரீ.க.தியாகராச குருக்களினால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு அவரால் பரிபாலனமும் செய்யப்பட்டு வந்த நீர்வேலி செல்லக் கதிர்காம ஆலயம் அக்காலத்திலேயே சிற்றாலயமாய் இருந்த போதும் அருளாற்றலால் பெரும் புகழுற்று விளங்கியது.

குருக்கள் முதுமையால் தளர்வுற பின் பராமரிப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருந்த திருமதி.இராசா குடும்பத்தார் அடியார்களின் ஆதரவுடன் கோவிலை பராமரித்தனர். எனினும் காலவசத்தால் பொலிவு இழந்தது சில காலம் பூஜை ஆராதனைகளும் தடைப்படலானது. இந்நிலையில் அடியவர்களின் வேண்டுகோளின்படி பிரம்மஸ்ரீ. கு .தியாகராச குருக்கள் ( நீர்வை மணி ஜயா) பூஜகரானார். பின் பல திருத்த வேலைகள் செய்யப்பட்டு 1985 இல் கும்பாபிஷேகம் நிகழ்ந்தது.


1995ல் நாட்டின் அசாதாரண சூழலினால் ஆலயம் மிகுந்த பாதிப்புக்குள்ளான போதும் பக்தர்கள் குருக்களின் பேரூக்கத்தாலும் முருகனின் கருணையாலும் 1997ல் புனருத்தாரண கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. 2003 மகாமக வருடத்தில் திருக்குளம் அமைக்கப்பெற்றது. ஸ்ரீ கதிர்காம சுவாமி பேரில் மஹாவித்துவான் வீரமணி ஜயர் அவர்கள் கீர்த்தனைகள், ஊஞ்சல் பாடியுள்ளார். வித்தகன் கோபாலசிங்கம் கவிஞர் தோத்திரப் பாமாலை இயற்றியுள்ளார். நீர்வை மணி ஜயாவின் ஆதரவுடன் ஆலய வெளியீடாக தமிழ், வடமொழி நூல்கள் பல வெளியிடப்பட்டுள்ளன.

தென்னிலங்கை கதிர்காமம் போலவே இங்கும் ஜாதி மத பேதமின்றி மக்கள் வழிபட்டு பேரருள் பெறுகின்றனர். நூலகம் ஒன்றும் ஆலயத்திலுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### சிறப்புகள் / தனித்துவங்கள்

1. துறவறம் பேணிய தூய பெண்ணடியார்கள் ஸ்தாபித்த கோயில்
2. நாக தேவர்களால் காக்கப்படுவதாக ஐதீகமுள்ளது.
3. ஆலய சூழலில் பல்வகை மரங்களுமுள. ஆலய சூழல் ஆனந்த மயமானது.
4. சமாதி லிங்க ஸ்தாபனமும் வேலாயுத பிரதிஷ்டையுமுள்ள கோயில்.
5. தனித்துவமான வழிபாட்டுப் பாரம்பரியங்கள் உண்டு.
6. பலதொழில் செய்வோர் முதலாக பிற சமய சகோதரர்கள் வரை பலரும் ஆலய வளர்ச்சியில் பங்கு பற்றியுள்ளனர்.

- தி.மயூரகிரி



### மகோற்சவ குருவின் ஆசியுரை

இறைவன் இரதத்தில் இவர்ந்து இவ்வுலக மக்களுக்கு அருள்புரிய வருகிறான். ஐந்தொழில் தத்துவத்தில் இரதோற்சவம் அழித்தலைக் குறிக்கும். சிவபெருமான் தேர் ஏறி திரிபுரங்களை அழிக்கச் சென்றார் என புராணம் கூறுகிறது. சூரபன்மன் தவத்தினால்அழியாத தேர் பெற்றான் என கந்தபுராணம் கூறும். இவ்வாறு தேரின் பெருமைகள் பல திருவிழாக்களில் நடுநாயகமாக விளங்குவது தேர்த்திருவிழா. இன்று நீர்வை செல்லக் கதிர்காம கந்தன் தேர் ஏறி வருகிறான். கலியுகவரதன் கந்தனின் தேர் வடம் பிடித்து இழுத்தால் எமது வாழ்க்கைத் தேர் சிறப்பாக ஓடும். எம்பெருமான் தேரில் பவனி வந்து ஆன்மாக்களின் ஆணவ மலத்தை நீக்கி அருள்புரிகின்றான். தேர் வடம் பிடிப்போம். தேவனைத்துதிப்போம். தேவர் போல் வாழ்வோம்.

சிவஸ்ரீ. சா.சோம தேவக்குருக்கள்
(பிரதமகுரு)
ஸ்ரீ அரச கேசரிப்பிள்ளையார் கோயிலடி

### நெஞ்சம் கவர்ந்த கள்வன்

ராகம்: திலங் தாளம்: ஆதி

**பல்லவி**
நீர்வேலிப்பதியிலே நெஞ்சம் கவர்ந்த
கள்வன்
சீர்மேவும் வரந்தரும் செல்லக் கதிர்காமன்

**அனுபல்லவி**
பார்போற்றிடும் ஷண்முகன் பார்த்திடுவான்
என்முகம்
கூர்வே லெடுத்தேர்ந்தும் குமரன்
ஆறுமுகன்

**சரணம்**
கந்தன் கதிர்காமனிடம் காந்தம்
இருக்குதடி
எந்தன் மனம்மயங்கி இதயம் இழுக்குதடி
வந்தெனைப் பாரானோ வரங்களும்
தாரானோ?
விந்தை மயிலில் வந்தே வினைகளைத்
தீரானோ?


இயலிசை வாரிதி
பிரம்மஸ்ரீ என் .வீரமணி ஐயர்(1988)

மலர்த்தொகுப்பு
நீர்வை.ச.லலீசன்

### தேவஸ்தான வெளியீடாக மலர்ந்த நூல்கள்

**தமிழ் நூல்கள்**
- கதிர்காமத் திருப்புகழ்
- நீர்வை செல்லக்கதிர்காம சுவாமி கீர்த்தனை
- நீர்வை செல்லக்கதிர்காம சுவாமி தோத்திரங்கள்
- மஹோற்சவ சிறப்பு
- மஹா கும்பாபிஷேக மலர்
- கிருபானந்தவாரியார் அருளுரைகள்
- நவக்கிரஹ வழிபாடுகள்
- ஆறுமுகக் கடவுள்
- ஈழத்துச் சைவச்சான்றோர்கள்
- கந்த சஷ்டி கவசம்
- கார்த்திகை தீபம்
- சித்திர குப்தர் கதை

**சமஸ்கிருத நூல்கள்**
- சுப்பிரஹ்மண்யம்
- சுப்பிரஹ்மண்யார்ச்சனம்
- சுப்பிரன் மண்ய யந்திர பூஜா
- சுப்பிரஹ்ய மண்ய சஹஸ்ர நாம ஸ்தோத்திரம்




# மீன் பார்வை

# நோத்முதல் கோபல்லவா வரை 9

## ஆங்கிலேயர் இலங்கையைப் பிடித்தமை

க.சி.குலரத்தினம்



வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று ஓய்ந்தபின் கொழும்பை தாக்குவதாகத் திட்டமிட்டார்கள். கொழும்பை எதுவிதத்திலும் கைப்பற்றி விடுவதாக முனைந்து நின்ற ஸ்ரூவாட் பலவித படைகளோடும் உப படைகள் கருவிகளோடும் புறப்பட்டுத் திருகோணமலையை 16.1.1796இல் அடைந்தான். அங்கிருந்து 2236 ஐரோப்பிய வீரரும் 4649 சுதேச வீரரும் புடைசூழக் கொழும்பை நோக்கிச் சென்றான். வங்காளத்திலிருந்து வந்த படைகள் நீர்கொழும்பில் ஸ்ரூவாட்டின் படைகளோடு சேருவார்கள் என எதிர்பார்த்தனர். ஸ்ரூவாட் முன்னர் கண்டி மன்னனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் வண்ணம் கண்டி மன்னன் ஆங்கிலேயருக்கு உதவியாய் இருப்பதாக வாக்களித்திருந்தான்.

ஸ்ரூவாட் நீர்கொழும்பை அடைந்த போது அவனுக்கு வாக்களித்த உதவிகள் கிடைத்தன. ஸ்ரூவாட் கொழும் பை அடைந்து ஒல்லாந்தர் கோட்டை மீது தாக்கினான். ஒல்லாந்தர் கோட்டைக்குள் இருந்தார்கள். அவர்கள் சரணடையாவிட்டால் யுத்தம் மூளலாம் என ஸ்ரூவாட் உடன் கொண்டுசென்ற கடிதங்களைக் காட்டியும் வான் ஏஞ்சல் பிக் இணங்கவில்லை. அவன் தனக்கு பட்டேவியாவிலிருந்து உதவி கிடைக்கலாம் என்றும், பிரஞ்சுப் படைகள் உதவிக்கு வரலாம் என்றும், இந்தியாவில் திப்புசுல்தான் ஆங்கிலேயரை இடைமறிக்கலாம் என்றும் எதிர்பார்த்தான். இவை யாவும் அவன் எண்ணியபடியே நடக்கவில்லை. வான் ஏஞ்சல் பிக் உள்நாட்டில் எதிர்பார்த்த உதவிப்படை கிடைக்கவில்லை. அவனிடம் இருந்த படைகளிலேயே பலர் இறந்தும் காயப்பட்டும் போயினர். எஞ்சியவருள் பலர் அஞ்சி ஓட்டமெடுத்தனர். எஞ்சியவர்களையும் வான் ஏஞ்சல் பிக் விசுவாசமுள்ளவராகக் கருத இயலவில்லை.

இவ்வாறாகக் கொழும்பிலே வான் ஏஞ்சல் பிக் பக்கத்திலே 584 ஐரோப்பிய வீரரும், 772 மலாய வீரரும், 124 ஐரோப்பிய பீரங்கி வீரரும், 118 கடற்படை வீரரும் இருந்தார்கள். ஆனால் எதிரிகளாய் ஆங்கிலேயர் பக்கத்தில் 10,000 வீரரும் கடற்படையினரும் இருந்தார்கள். அவர்களிடம் பல கப்பல்களும் பிற வசதிகளும் இருந்தன. ஏஞ்சல் பிக் அவர்களின் ஆலோசனைச் சபையினர் சரணடைதலே முறை, ஒல்லாந்தரின் கோட்டை ஆங்கிலேயரின் தாக்குதலை மூன்று நாள்களுக்குத் தானும் தாங்கமாட்டாது என்றனர். தோல்வியின் பின் ஏற்படும் நிபந்தனைகள் கௌரவக் குறைவாக இருக்குமாதலால் யுத்தத்துக்கு முன்னதாகவே கௌரவமாகச் சரணடைந்து நிபந்தனைகளை எழுதிக்கொள்வது மேலான காரியம் என ஏஞ்சல் பிக் அவர்களின் ஆலோசனையாளர் கூறினர்.

சரணடைதலே செய்யக் கூடிய காரியம் என ஆலோசனைச் சபையார் ஏகமனதாகத் தீர்மானித்தார்கள். அதனை அனுமதித்த வான் ஏஞ்சல்பிக் சமாதான நிபந்தனைகளை எழுதினன். அவற்றை மேஜர் அஜிநியூ படித்துத் தமது கருத்தையும் தெரிவித்தான். இந் நிபந்தனைகள் ஆலோசனை சபையினரால் படிக்கப்பட்டன. அவர்கள் அவற்றை 15.2.1796 இல் ஏற்றுக் கொண்டார்கள். எனவே 16.2.1796 காலை ஆங்கிலேயர் கொழும்பிற் பிரவேசித்தார்கள். சில மணி நேரமாவதற்குள் களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய இடங்களிலும் ஆங்கிலேயர் புகுந்தனர். எனவே கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய இடங்களிலிருந்து ஒல்லாந்தர் இளைப்பாறினர்.

ஒல்லாந்தருடைய தோல்விக்குப் பல காரணங்கள் உண்டென்பர். படைத் தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையில் ஒற்றுமைக் குறைவும் ஒத்துழைப்பின்மையும் முயற்சியின்மையும் நிலவியதால் ஒல்லாந்தர் தோற்றார்கள் என்பர். ஆங்கிலேயர் படைகள் அங்கே போகாதிருந்தால் ஒல்லாந்த வீரராலேயே தளபதி வான் ஏஞ்சல்பிக் கொலை செய்யப்பட்டிருப்பான் என்றும் கூறுவர். ஆங்கிலேயரின் முற்றுகையையும் எதிர்ப்பையும் சமாளிக்கக் கூடிய வசதிகள் ஒல்லாந்தரிடம் இருக்கவில்லை. ஒல்லாந்தருக்குத் தாய்நாட்டிலிருந்து எவ்வித உதவியோ உற்சாகமோ கிடைக்கவில்லை. அவர்களுடைய வர்த்தக சங்கம் சீர்குலைந்து போயிருந்தது. பண்டசாலையில் பொருட்கள் விலைப்படாமற் கிடந்தன. உத்தியோகத்தர் பல மாதங்களாக வேதனம் பெறாமல் மனஞ்சலித்திருந்தனர். படையிற் கூலியின் பொருட்டுச் சேர்ந்திருந்த சுதேசிகள் கூலி பெறாமையால் உற்சாகங் குன்றியிருந்தனர். பலர் படையை விட்டு நீங்கினர். எல்லைப் புறங்களில் கண்டியரசன் இடையூறுகளைச் செய்வித்தான். இவ்வித துன்பங்களுக்கிடையே யுத்தநெருக்கடியுஞ் சேரவே ஒல்லாந்தர் நிலைமையைச் சமாளிக்க இயலாமை காரணமாக வெற்றிகரமாக இளைப்பாறிப் பின்வாங்குவராயினர்.

ஆங்கிலேயர் ஒல்லாந்தருக்குக் கௌரவமான நிபந்தனைகளை அளித்துச் சரணாகதியை ஏற்றுக்கொண்டனர். ஒல்லாந்த உத்தியோகத்தர் ஆங்கிலேயரின் அரசாங்கத்தில் கௌரவமாக வாழவும், விரும்பினோர் சுயமரியாதையுடன் வெளியேறவும், படைவீரர் கைதிகளாகிச் சென்னைப் பட்டினத்துக்குப் போகவும், ஒல்லாந்தரின் சமய பரிபாலன குருமார் கௌரவத்துடன் தம் பணியைத் தொடர்ந்து ஆற்றவும், திணைக்கள உத்தியோகத்தர் புதிய அரசாங்கத்துடன் ஒத்துழைத்துச் சம்பளம் பெறவும், ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த வழக்குகள் யாவும் அவர்களுடைய சட்டப் பிரமாணங்களுக்கு அமையவே ஆங்கிலேயர் விசாரித்துத் தீர்ப்பளிக்கவும், ஒல்லாந்த அரசாங்கம் அச்சிட்ட 6,50,000 ரூபா பெறுமதியான தாள்களின் பெறுமதியை ஆங்கிலேயர் கொடுக்கவும், ஒல்லாந்தர் தமது பரிபாலனத்தில் இருந்த இல்ங்கைக் கரை நாடுகளை ஆங்கிலேயர் வசம் ஒப்புவிக்கவும் கையொப்பமிட்டனர். இதனால் இதுகாறும் 138 ஆண்டுகளாக ஒல்லாந்தர் இலங்கைக் கரைநாடுகளில் செலுத்திய அதிகாரம் நீக்கப்பட்டது. (தொடரும்)

# தீராத பணி அழுத்தம் இதய நோய்களை ஏற்படுத்தும் அழுத்தத்தைக் கட்டுப்படுத்தினால் நோயின்றி வாழலாம் !

பணி தொடர்பான அழுத்ததம் (Stress) நமது உடலில் நேரடியான பாதிப்புகளை உருவாக்குவதுடன் இதய நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்குவது தெரியவந்துள்ளது.

எனவே அழுத்தத்தைக் கட்டுப்படுத்தினால் நோயின்றி வாழமுடியும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக நடாத்தப்பட்ட ஆய்வில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இங்கிலாந்து அரசில் பணியாற்றும் ஊழியர்களின் பணிச் சூழல், அவர்களின் உடல் நிலை ஆகியன பல ஆண்டுகளாக கண்காணிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் கடைநிலை ஊழியர்கள் முதல் உயர் அதிகாரிகள் வரை கலந்து கொண்டனர்.

பணி தொடர்பான அழுத்தம் உள்ளவர்களில் 70 சதவீதத்தினருக்கு இதயநோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

கடந்த 1960 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தொழிலாளர்களின் பணியழுத்தம் தொடர்பான ஆய்வில் 1960 ஆம் ஆண்டு தொடங்கி தொழிலாளர்களின் நடவடிக்கைகள் பதிவுசெய்யப்பட்டதாகக் கூறினர்.

அதன் படி ஆய்வாளர்கள், பணி குறித்த தொழிலா ளர்களின் உணர்வுகள், அவர்களின் இதயத் துடிப்பு வேறுபாடு, இரத்த அழுத்தம், இரத்தத்தில் உள்ள அழுத்தக் ஹோர்மோனான கார்டிசாலின் அளவு, உடற்பயிற்சி, புகைப்பிடித்தல், குடிப்பழக்கம் ஆகியவற்றைக் கண்காணித்து வந்துள்ளனர்.

மேலும் இந்த ஆய்வின் மூலம் ஆய்வாளர்கள் தீராத இதய நோய்க்கு ஆளாகி மாரடைப்புக்கு உள்ளானவர்கள், உயிரிழந்தவர்கள் தொடர்பான விபரங்களை தெரிந்து கொண்டதாகவும் கூறினர்.

12ஆண்டுகளுக்கு மேலாக நடத்தப்பட்ட ஆய்வில் தீராத பணியழுத்தம் உள்ள 50 வயதிற்குமேற்பட்ட ஆண்களுக்கும் -பெண்களுக்கும் இதயநோய்களுக்கு இடையேயான தொடர்பு வலுவாகவே உள்ளதாக இலண்டன் பல்கலைக்கழக கல்லூரியைச் சேர்ந்தவரும், இந்த ஆராய்ச்சியின் தலைவருமான மருத்துவர் தரணி சந்தோலா தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெறும் நிலையில் உள்ளவர்களுக்கு பணிதொடர்பான அழுத்தம் அதிகம் இல்லாததாகவும் அவர்களுக்கு இதயம் தொடர்பான நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைந்து காணப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பணி தொடர்பான அழுத்தம் உள்ளவர்களுக்கு போதுமான காய்கறி, பழ வகைகளை தங்களது உணவில் சேர்த்துக் கொள்ளவும், உடற்பயிற்சி மேற்கொள்ள இயலாமலும் போய்விடுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

குடிப்பழக்கம் இந்த ஆய்வில் ஒரு காரணியாக கண்டறியப்படவில்லை. அத்துடன் வாழ்க்கை முறையும் நோய் வருவதற்கு ஒருகாரணமாக அமையவில்லை. ஆனால் அழுத்தத்திற்கும் நோய்களுக்குமான உயிரியல் இயங்கு முறையிலும் தொடர்பு உள்ளதை கண்டறிந்ததாக தெரிவித்துள்ளனர்.

ஆனால் அதனை நிரூபிப்பதுதான் கடினமாக உள்ளதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதயத்தைக் கட்டுப்படுத்த நரம்பு மண்டலத்தின் ஒரு பகுதியை அழுத்தம் தடை செய்கிறது. நரம்பு மண்டலப் பகுதிதான் இதயம் எவ்வாறு இயங்கவேண்டும் என்பதைச் சொல்வதுடன், இதயத் துடிப்பின் வேறுபாட்டையும் கட்டுப்படுத்துகிறது.

இதயத் துடிப்பை முறைப்படுத்தும் வேகம் அழுத்தம் உள்ளவர்களுக்கு குறைவாக உள்ளது அதேபோல ஹோர்மோன்களை சுரக்கும் நியுரோன் எண்டாக்ரின் முறையும், அழுத்தத்தால் பாதிப்புக்குள்ளாகிறது.

அழுத்தம் அதிகம் உள்ளவர்களின் இரத்தத்தில் உள்ள அழுத்த ஹோர்மோனான கார்டிசாலினின் அளவு காலை அதிகமாக உள்ளதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பணி தொடர்பாக ஏற்படும் மன அழுத்தம் உடலில் ஏற்படுத்தும் வேதியல் மாற்றங்கள் இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக இங்கிலாந்து இதய அறக்கட்டளை மருத்துவர் ஜோன் டேவிசன் கூறியுள்ளார்.

மேலும் மன அழுத்தம் காரணமாக புகைப்பிடித்தல், உடற்பயிற்சி மேற்கொள்ளாமை, சரியான முறையில் உணவு சாப்பிடாத குணம் போன்ற தேவையற்ற செயல்கள் நமது இருதய நலனைக் கெடுக்கின்றன.

மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவதற்கான சரியான வழிமுறைகளைக் கற்றுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

நமது அன்றாட வாழ்க்கையில் யதார்த்தமாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பதன் மூலம் அழுத்தத்தைக் விலக்குவதோடு, இருதயம் தொடர்பான நோய்கள் தாக்கும் சாத்தியக் கூறுகளில் இருந்து தப்பலாம் என்று ஜோன் டேவிசன் தெரிவித்துள்ளார்.




## (பி.ஐ.எஸ்) கோளாறு

சத்தான உணவு சாப்பிடாமல் எப்போதும் சாட் பிட்சா ஐஸ்கீரிம் குளிர்பானம் ஆகிவற்றை சாப்பிட்டு வந்தால் முதலில் வரும் கோளாறு "இர்ரிடபிள் பவல் சிண்ட்ரோம்" (பி ஐ.எஸ்.)தான்.

குடலில் ஏற்படும் ஒருவித எரிச்சல், அழற்சி தான் இது. இது பெரிய கோளாறில் கொண்டு போய் விடும். அதனால் முதலிலேயே கண்டுபிடித்து சத்தான உணவு, காய்கறிகள், பழங்கள் சாப்பிடுவது நல்லது. நார்ச்சத்துள்ள கீரை, காய்கறிகளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஜுஸ் சாப்பிடுவதை விட பழங்களை சாப்பிட வேண்டும். லெமன் ஜுஸ் குடிக்கலாம். ஒரு நாளைக்கு மூன்று லீற்றர் தண்ணீர் கண்டிப்பாக குடிக்க வேண்டும்.

## வெயிட் போடவில்லையா?

வெயிட் போடுவதற்காக கேக், ஐஸ் கிறீம், பிட்சா போன்ற சமாச்சாரங்களை இளம் வயதினர் சாப்பிடுவதுண்டு. இது பின்னாளில் கெடுதலாக அமையும்.

வயதுக்கு ஏற்ற எடை இல்லாவிட்டால், தானாக காட்டிக் கொடுத்து விடும். அப்போது பசியெடுக்காது.

சோர்வு வரும். டாக்டரிடம் போய் ''செக் அப்'' செய்வது தான் நல்லது.

மற்றபடி, பாலாடைக்கட்டி, இனிப்பு, தயிர், பருப்பு வகைககள், கடலை கள், பேரீச்சை, வாழை, அப்பிள் போன்றவை சாப்பிட்டு வரலாம். அதுவே போதுமானது.

## பசியெடுக்கவில்லையா ?

சிலர் நன்றாக 'உள்ளே' தள்ளுவர் ; ஆனால் பசியே எடுக்கவில்லை என்று புலம்புவர். இதனால், உடல் எடை கூடுவதுடன், சர்க்கரை, பிபி. கோளாறும் வந்துவிடும். சத்தான உணவுகளை சாப்பிடுவது தான் நல்லது.

அதைவிட்டு, கண்ட நொறுக்குத் தீனிகளை சாப்பிடுவது, குறிப்பிட்ட பைக்கற் உணவுகளை சாப்பிடுவது கெடுதல் தான்.

பசியெடுக்க ஒரே வழி உடற்பயிற்சி தான். வாரத்துக்கு நான்கு முறையாவது தலா 40 நிமிடம் நடக்க வேண்டும்.

வாகனங்களில் செல்லாமல் நடது செல்லுங்கள். பசியெடுப் பது மட்டுமல்ல ; நல்லா தூக்கமும் வரும்.

## பூண்டு எதுவரை ...

பூண்டு பற்றி சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் இன்னமும் புரியாத புதிராகத்தான் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

அதை உணவில் சேர்த்துக்கொண்டால் பல நன்மைகள் இருக்கின்றன. ஆனால் கோளாறு வந்த பின் அதை அதிகமாக பயன்படுத்துவது பயனளிக்காது என்கின்றனர்.

இரத்த அழுத்தம் வராமல் தடுக்கும் சக்தி பூண்டுக்கு உண்டு. ஆனால் வந்த பின் மருந்து தான் நல்லது. ஓரளவு பூண்டு பயன்படுத்தலாம் என்பது தான் நிபுணர்களின் லேட்டஸ் ஆய்வு முடிபு.

மணிபல்லவத்தில் மஹோற்சவம்



நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

**இன்று தேர்த்திருவிழா**

## தெங்கம் பொழிலூடே தேரில் வருவாளே

வங்கம் மலிவாக வள்ளம் பொலிகின்ற
பொங்கும் கடல் சூழ்ந்த புனித நயினையில்
சங்குப் படநாகம் சார்ந்து பணிசெய்யும்
தெங்கம் பொழிலூடே தேரில் வருவாளே

*சிவ சண்முகவடிவேல்*

## நல்லருள் புரிவாயம்மா

ஆழியின் அலையாட – கொஞ்சும்
கிளி தோள் சுமந்து – நச்சரவ
நிழல் அமர்ந்து – நயினையில்
நாகேஸ்வரி நல்லருள் புரிகின்றாள்
வெஞ்சினம் கொண்டெழுந்து
எமக்குற்ற பகை விரட்ட
தாயே உனை கெஞ்சி அழுகின்றோம்
எமைக் காத்திடவே.
தங்க ரதம் ஏறியே விரைந்தோடி
வருவாயம்மா – நல்லருள் புரிவாயம்மா

*எஸ்.பி.சண்முகநாதன் (ஜே.பி)*
*ஆனைப்பந்தி*

## பேறு தந்து ஆண்டுகொண்டாய்

ஏறுகின்றாய் அம்மா தேரினிலே
எல்லையில்லா இன்பம் சேருதம்மா
பாறுதம்மா வினை பறக்குதம்மா
பரவசம் மனதிலே பரவுதம்மா
மாறுதம்மா துயர் மறையுதம்மா
மனதினில் அமைதி நிறையுதம்மா
பேறு தந்தே எனை ஆண்டுகொண்டாய்
பெருமைசேர் நயினையின் நாயகியே!

*கோவை. தி.சுகப்பிரதா*

## சாந்தியும் சமாதானமும் பரவட்டும்

தேர் ஏறி வரும் தேவியே – பூஷணி
தேவரும் வியந்து நிற்க
தேசம் எங்கும் ஒளி பொங்க
தேன் சொரியும் தேனாமிர்தமாம்
உன் புகழை பஜனையாய்
இசைத்திடவே – தேவி
உன் வரவால் உலகம் எங்கும்
சாந்தியும் சமாதானமும் பரவட்டும்.

*இ.பிரதா, நல்லூர்*

## நற்கதி அருள்வாய் நீயே

அம்பிகையே அகிலாண்ட நாயகியே ஆதிபராசக்தியே
அன்பர் அகமுறையும் அன்னபூரணியே தாயே
நம்பியுனைச் சரணடைந்தோம் நற்கதியருள்வாய் நீயே
நயினைப் பதியுறையும் நாகபூஷணியே நாரணியே
வெம்பியழுதே நம் வேதனையைச் சொல்லி நின்றும்
அம்பிகையே அருள்புரிய ஏன் இன்னும் தாமதம்?
தும்பிமுகனும் தம்பியும் கூடவே அருகில் வர
தேர் மீது எழுந்தருளும் தேவியே சரணம் அம்மா!

*சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்*

## இடம் பிடிப்போம்

வண்ணரதம் வருகுதம்மா நயினையம்மன் வீதியிலே
எண்ணமெல்லாம் கொள்ளைகொள்ளும் ஆனைமுகன்
முதலில்வர
மிஞ்சுமெழில் கூடிடவே நாகம்மாள் தேரில்வருகிறாள்
நாதஸ்வரம் மேளதாளம் மேலோங்கி ஒலித்திடவே
வேதத்தின் நாதவொலி காதினிக்கக் கேட்டிடுமே
வீதிபஜனையிலே தாளவொலி மிதந்துவர
மனமுருகிப் பண்பாடி நாகம்மையைத் தொழுது கொண்டே
வடம்பிடித்தே இழுத்திடுவோம் இடம் பிடிப்போம் முத்தியிலே

*கவிமணி கந்த முருகேச தாசனார்.*

## சித்திரத் தேரினில் அருளீய வருவாய்

அழகான நயினையின் புகழாக வாழ்ந்திடும்
அம்பிகையே நயினைத் தாயே
அகிலத்திற்கோர் அன்னையென ஒளிர்கின்ற தேவி
அடியார் முன் சிங்கவாகனத்திலேறி ஆனந்தமாய் நிற்பாய்
அந்தமுத சுரபிதரும் அம்பிகையே இந்த அழகமைந்த
தேரினிலே அருளீய வருவாய்!

*சின் கந்தையா –பொன்னாவளை காரைநகர்.*

## ஆனி பூரணை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ணசமிதியில் ஆனி பூரணை விழா நாளை புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பஜனை விசேட ஆன்மீக உரை அஷ்டோத்திர நாமார்ச்சனை, தீபாராதனை, பிரசாதம் வழங்கல் என்பன இடம்பெறும். ஓ

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவ பரிபாலன சபையின் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சபையின் உப தலைவர் பி.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் த.க.பாடசாலை அதிபர் செல்வி சாந்தினி மாணிக்கம் கலந்துகொண்டு விளையாட்டு நிகழ்வை ஆரம்பித்துவைக்கவுள்ளார். ஓ

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட ஊடக வளம் மற்றும் பயிற்சி நிலைய முதலாவது ஊடகத்துறை டிப்ளோமா மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை புதன்கிழமை காலை 10.30 மணியளவில் 84 ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊடக வள பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஓ

## இராசிபலன்

*17.06.2008*
*(ஆனி 3 செவ்வாய்க்கிழமை)*
*சதுர்த்தசி முன்னிரவு 9.43 மணிவரை*
*அனுஷம் பிற்பகல் 1.35 மணிவரை*
*இராகுகாலம் 2.53-04.23 மணிவரை*
*சுபநேரம்-10.23-11.53 மணிவரை*
*நயினாதீவு நாகபூஷணி*
*அம்மன் தேர்*

| | |
|---|---|
| மேடம் | பொருள் விரயம், எதிர்பார அச்சம், காரிய தடங்கல், உடல்நலக் குறைவு |
| இடபம் | அபூர்வ சந்திப்பு, திடீர் பயணம், போசன சுகம் ,முயற்சி கைகூடும். |
| மிதுனம் | மனமகிழ்ச்சி, எடுத்த கருமங்கள் நிறைவேறும், நோய் குணமடைதல். |
| கடகம | புத்திரரால் கவலை, அஜீரண ரோகம், காரிய இடையூறு, பணக் குறைவு |
| சிங்கம் | மனச் சஞ்சலம், சுப நிகழ்வு, வாகன சுகம், முயற்சி தாமதம். |
| கன்னி | காரிய நன்மை, பணவருவாய், அன்னியர் சந்திப்பு, தேக நலன். |
| துலாம் | எடுத்த காரியம் தாமதம், மரியாதைக் குறைவு, அதிக செலவு. |
| விருச்சிகம் | மனக்குழப்பம், உஷ்ண நிலை, புதிய முயற்சி ,போசன சுகம். |
| தனுசு | இடமாற்றம், அமைதிக் குறைவு, தொழில் சிந்தை, பணவிரயம். |
| மகரம் | முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை . |
| கும்பம் | அதிக பிரயாசை, உற்சாகம், பாராட்டு போசன, சுகம். |
| மீனம் | பித்தரோகம் ,ஆன்றோர் சந்திப்பு, புதிய முயற்சி, பிரயாணம். |

வளவன்

மணிபல்லவத்தில் மஹோற்சவம்



நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

**இன்று தேர்த்திருவிழா**

## தேரினில் வருகின்றாயே தீர்வு தான் என்ன அம்மா?

நீரினுள் மூழ்கும் நேர வேதனை தாங்கொணாது
பாலகனழுதானென்றும் பார்வதி நீ ஓடி வந்து
பாலினை ஊட்டினாயாம் பகிடியோ மெய்யோ அம்மா?
காலகாலமாய் கதறியே அழுது மாயும்
பாலகர் பாவையர் பாரினர் உன்னை வேண்ட
வேலவன் தாயே நீயும் வேதனை எதுவும் இன்றி
கால்களிற் சிலம்பு ஆட கைகளில் வளையல் ஆட
மார்பினில் பதக்கமாட மக்களும் உன்னோடாட
சீர் மிகு நயினை வீதி செறிந்த உன் அடியாரோடு
தேரினில் வருகின்றாயே தீர்வுதான் என்ன அம்மா?

*கவிமணி அன்னைதாசன்*
*உரும்பிராய்.*

## மருந்து கொடு!

தேர் ஏறி வருவாய்
தேவி நீயே
பார் வாழ அருள்வாள்
பார்வதியே
கார்போலக் கருணை
பொழிந்துவிடு
கடுந்துயர விஷம் நீங்க
மருந்து கொடு!

*ஜெ.கந்தவேள்*
*கொக்குவில்*

## மணிபல்லவத் தாயே தேரேறி வருக!

காஞ்சி காமாட்சி மதுரை மீனாட்சி
காசி விசாலாட்சி நீ அம்மா
வாஞ்சையோடு உன் பெயர் கூறி அழைக்கின்றோம்
உன் குழந்தைகள் நாம்; எமை மடி அணைப்பாய்
ஓய்ந்து போனதில்லை கடலின் அலை அம்மா
ஓய்ந்துபோனதில்லை உன் அருளின் அலை அம்மா
ஆய்ந்து செய்த மணி நெடுந்தேரிலே–ஒய்யாரமாகவே
மணிபல்லவத் தாயே! வருவாயே!

*கா.கார்த்திகேசு*

## பூரணியே நாகம்மா எழுந்து வாராய்!

அன்பரெல்லாம் அலை கடலைத் தாண்டி வந்து
அம்பிகையுன் தேர்வடத்தில் இடம் பிடித்து
துன்பமெலாம் தீர்த்திடுவாள் தாயே யென்று
தொழுது நின்றார் இன்னுமென்ன தாமதமோ?
இன்பமழை பொழிந்திடுவாய் நயினைத் தாயே
எம்மினத்தின் இடர்களைந்து ஏற்றங் காணப்
பொன்விழாக் கண்டொளிரும் புனிதத் தேரில்
பூரணியே நாகம்மா எழுந்து வாராய்!

*நயினை இராகுலன்.*

## தேசநலன் காக்க தேரேறி வருக!

தேசநலம் காக்க தேரேறி வருக தாயே!
தேம்பி அழும் தமிழர்களைக் காக்க தேரேறி வருக
போரோய வேண்டுமம்மா நாகபூஷணி
புது வாழ்வைத் தந்திடவே தேரேறி வருக
ஆரோடு நோவமம்மா தாயே நாகபூஷணி
அவலங்களைப் போக்க தேரேறி வருக
வேரோடு துயரறுக்க தாயே தேரேறி வருக
விடிவதனைத் தந்து காக்க தேரேறி வருக

*மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்*

## தேரேறும் நாயகியே!

தேரேறி நீவரும் அழகைக் காண
தேடி உனை நாடி வந்தேனம்மா
கடல் கடந்து உனை வந்து பார்த்தபின்னே
கருகிய பூவுள்ளம் மலந்ததம்மா
நயினையில் தேரேறும் நாயகியே
நான் பணிந்தோதும் தோத்திரத்தை
ஏற்றுக்கொண்டு ஏற்றமதைத்தர
வரமளிப்பாய் நாகபூஷணியே....

*நிரோஜா சிவநாதன்*
*மானிப்பாய் மெமோறியல் கல்லூரி*

# சிவத்தமிழ் அன்னையின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள்



# சிவத்தமிழ் செல்விக்கு இரங்கல் செய்திகள்

## சைவ விவகாரக்குழு யாழ்.மாநகராட்சி மன்றம்

(யாழ்ப்பாணம்)

சைவத் தமிழ் பேரரசி என யாழ்ப்பாணம் மாநகர சபையினால் பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் கவலை அடைகின்றோம்.

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினது ஆரம்பம் முதல் இற்றை வரையான அதன் வளர்ச்சிக்கு பல்வேறு வகையான உதவிகளை வழங்கி வந்தமையும் மேற்படி குழுவினால் நல்லை கந்தனின் உற்சவக் காலத்தில் வருடா வருடம் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலருக்கு ஆசியும் வாழ்த்தும் கூறியதோடு அம்மலரின் முதற்பிரதியை பெற்று வந்தமையும் நன்றியோடு நினைவு கூர்ந்து அம்மாவின் ஆத்மா எல்லாம் வல்ல நல்லைக்கந்தனின் திருவடிகளில் சாந்திபெற அவன்தாள் பணிகின்றோம்.

(ச)

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

'யாரும் இல்லையென எவரும் இல்லை' எனும் உயர் உண்மையை உலகுக்கு உணர்த்திய உன்னதத்தாய் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிரிவு தரும் துயரில் அவரது மகவுகளாக நின்று நாமும் தோய்ந்து கொள்கின்றோம்.

போர் தந்த கொடுமை ஒருபுறம்,சமூக பொருளாதார பின்னடைவுகள் மறுபுறம் என சிதைந்து செல்லும் எமது சமூக பிணைப்பை உறுதியடையச் செய்ய தன் வாழ்நாளை அர்ப்பணித்து சேவை புரிந்தவர் அன்னை அவர்கள்.

எமது பல்கலைக்கழக மாணவிகள் சிலர் அவரினால் நேரடியாக வளர்த்தெடுக்கப்பட்டவர்கள். அதேவேளை எமது மாணவர்கள் பலர் அவரது அறக்கொடை நிதியுதவி மூலம் உயர்வு பெற்றவர்கள்.

அத்தகைய சமூகத் தாயை இழந்தமை இடைவெளியாகிப் போன நிரந்தரப் பிரிவே ஆகும்.

சைவ சமயம் போதித்த உண்மை அறநெறியை முற்றும் உணர்ந்த ஞானத்தாய். அதற்கு முன்மாதிரியாக ஆலயத்தோடு இணைந்து அறப்பணி,அறிவுப்பணி புரிந்து பசிப்பிணியும் போக்கி நின்றவர்.

அற்றவர்க்கு அள்ளிக் கொடுத்த அன்புக்கை பெற்றவர். பிரிந்த துயரை போக்கி நின்ற தெய்வத்தாய். உற்றவர்க்கு உறுதுணையாய் நின்ற உள்ளம். துர்க்கை அம்மனின் இறையடிசேர பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் இறையருளை இறைஞ்சுகின்றோம். (ச)

## யாழ்.சைவ பரிபாலன சபை

(யாழ்ப்பாணம்)

சைவத்தமிழ் உலகின் தவப்புதல்வியாக சர்வதேசம் எங்கும் புகழப்பட்ட அன்னை கலாநிதி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இறைபதம் அடைந்தார்கள் எனும் செய்தி கேட்டு உலக மக்களில் ஒருவராக சைவ பரிபாலன சபையினராகிய நாமும் ஆற்றொணாத் துயரடைகின்றோம்.

ஒரு சிறந்த நிர்வாகியை இழந்திருக்கின்றோம். அவர் ஆலய தர்மகர்த்தா சபைத்தலைவியாகவும் ஏழைச் சிறார்களின் கண்ணீர் துடைத்த கருணை மிகு தாயாகவும் பல சமூகத் தொண்டு அமைப்புக்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்கள்.

சைவத்தமிழ் உலகம் அன்னாரின் பணியினை செவ்வனவே செய்வது ஒன்றுதான் நாம் செலுத்தக்கூடிய அஞ்சலியாக இருக்கும். (ச)

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

கலாநிதி, கலாசூரி தங்கம்மா அப்பாக்குட்டி அன்னையின் மறைவு குறித்து ஆழ்ந்த கவலையடைவதாகவும் அன்னாரின் இழப்பு சைவ சமயத்துக்கும் எமது மக்களுக்குமான பாரிய இழப்பாகும் என்றும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மறைவையொட்டி அமைச்சர் விடுத்திருக்கும் அனுதாபச்செய்தியில் அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சைவ சமயத்தினதும் தமிழ் இலக்கியத்தினதும் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வந்த அன்னை அவர்கள் துர்க்கா மகளிர் இல்லம், சிவத்தமிழ் செல்வி அன்னையர் இல்லம், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபம் போன்றவற்றை ஆரம்பித்து மக்கள் நலன் சார்ந்த பணிகளில் ஈடுபட்டு மக்களின் ஆன்மிக வாழ்க்கைக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் பாரிய உதவிகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

மக்கள் பணியே மகேசன் பணி என்பதை உணர்ந்து தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்ட அன்னையின் வாழ்க்கை வரலாறு அனைவருக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

அன்னையின் பிரிவால் துயறுரும் அன்னாரது உறவினர்கள் மற்றும் தமிழ் மக்கள் அனைவருடனும் தானும் தனது கட்சியும், தோழர்களும் சோகங்களை பகிர்ந்து கொள்வதாகவும் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் உயரிய பணிகள் எமது வரலாற்றில் மறக்க முடியாதவை என்றும் அவர் விட்டுச் செல்லும் பணிகளை உரிய முறையில் தொடர்ந்து மேற்கொள்வதே அவருக்கு நாம் வழங்கும் சிறந்த மரியாதையாகும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ச)

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி இம் மாத இறுதிக்குள் நடாத்தத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியை இம் மாத இறுதியில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம் மாதம் 14 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை வவுனியாவில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்த இவ் விளையாட்டுப் போட்டி யாழ்ப்பாண மாணவர்களின் போக்குவரத்துச் சிக்கல்கள் காரணமாக சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒத்திவைக்கப்பட்டது.

இந் நிலையில் இம் மாதம் 28 ஆம் திகதி முதல் நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளபோதும் யாழ்.மாவட்டப் போட்டியாளர்களின் முடிபுக்கு அமைய சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைப்படி புதிய திகதி அறிவிக்கப்படும் என வட மாகாணக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இப்போட்டியை நடாத்துவதற்கான திகதி அறிவிப்புத் தொடர்பில் கலந்துரையாட மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள யாழ். மாவட்ட மாணவர்களை நாளை புதன்கிழமை க்ாலை 9 மணிக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சந்திக்கவுள்ளார்.

இக் கலந்துரையாடலின் பின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் புதிய திகதி அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ். மாவட்டப் பாடசாலை மாணவ, மாணவிகளையும் அவர்களது பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரையும் அன்றைய தினம் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வத்தளையில் 6 பேர் கைது

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் எனத் தெரிவித்து பெண் ஒருவர் உட்பட 6 பேர் கொழும்பின் புற நகர்ப் பகுதியான வத்தளையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.அவர்களிடமிருந்து 2.7 கிலோக்கிராம் நிறையுடைய வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

## சம்பளத்தை அதிகரிக்கக் கோரி...

இலங்கையில் இன்று வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாது மக்கள் திணறிக்கொண்டிருக்கின்றனர். எனவே 5 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்திருக்கின்றோம். அதே நேரம் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளம் 500 ரூபாயாக அதிகரிக்கப்பட வேண்டும்.

அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள் என்ற பாகுபாடின்றி இந்தச் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 11 ஆயிரத்து 730 ரூபாயாகவும் தனியார் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 5 ஆயிரம் ரூபாயாகவும் உள்ளது.

இதை வைத்துக் கொண்டு வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே ஜூலை மாதச் சம்பளத்தை 5 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் ஜூலை 10 ஆம் திகதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செயற்படும்.

இது அரசிற்கு கொடுக்கும் முதல் அடியாகவே இருக்கும். அதன் பின்னரும் சம்பள உயர்வு வழ்ங்கப்படாவிடின் அரசாங்கம் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றார். (ச-5)

## சமாதான...

சமாதான முன்னெடுப்புக்களுக்கு நோர்வே தொடர்ந்தும் உதவி செய்யும் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் சமூகம் உள்ளிட்ட அனைத்துச் சமூகங்களின் அபிலாசைகளையும் நிறைவேற்றக் கூடிய பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றுக்கே நோர்வே ஆதரவு வழங்கும் என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-5)

## ஜனாதிபதி...

நடைபெற்ற இச் சந்திப்பில் தற்போது நடைபெறும் படை நடவடிக்கைகள் குறித்தே அதிகம் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

குறிப்பாக ஏ-9 வீதிக்கு மாற்றீடான பாதையை ஏற்படுத்தும் நோக்கில் படையினர் மேற்கொள்ளவுள்ள தாக்குதல்களை குழப்புவதற்காகப் புலிகள் தென்னிலங்கையில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தும் சாத்தியம் இருப்பதால் அது குறித்து அரசாங்கம் உரிய கவனம் எடுக்க வேண்டும் என இச் சந்திப்பில் தேசிய சுதந்திர முன்னணி வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## இலங்கை விடயத்தில் இந்தியா...

தொடர்பாக ஆளும் கூட்டணி மறைவான போக்கொன்றையே கடைப்பிடிக்கின்றது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினம் கடந்த வாரம் இடம் பெற்றது. இதன் போது ஒரு காங்கிரஸ் உறுப்பினர் கூட ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாக எந்தவொரு கருத்தையும் தெரி விக்கவில்லை என்றார் அவர்.

இந்தியாவுக்கு ஆதரவான இலங்கை அரசியல் தலைவர்கள் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டு வரும் நிலையில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான தலைவர்கள் தொடர்ந்தும் இந்தியாவில் அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி வருவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

விடுதலைப்புலிகளை நாட்டிலிருந்து முற்றாக விரட்ட வேண்டும் என இலங்கையர்கள் கருதினால் சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என அனை வரும் இணைந்து இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என சுப்பிரமணிய சுவாமி குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறெனின் விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்கு இந்தியா எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி உதவி செய்ய முடி யும். எனினும் சிங்களவர்கள் தமது மனத்தை ஒன்று திரட்டும் மட்டும் இந்தியா பார்த்துக் கொண்டிருக்க முடியாது என சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார். (ச-5)

## வவுனியாவில் தற்கொலைத் தாக்...

வவுனியாவில் ஏ-9 வீதியிலுள்ள பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 4 அதிகாரிகள் உட்பட 12 பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர். 2 அதிகாரிகள் உட்பட 23 பேர் காயமடைந்துள்ளனர்.

வவுனியா பிரதான படைத் தளத்திற்கு அண்மையிலுள்ள பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திலிருந்து கடமைகளுக்காகப் புறப்பட்ட பொலிஸாரை இலக்கு வைத்து நேற்றுக் காலை 7.10 மணியளவில் இத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட 12 பொலிஸாரில் 3 பெண் கான்ஸ்டபிள்களும் அடங்குவர் என்று வவுனியாப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரே பொலிஸ் அதிகாரிகள் நின்ற பகுதியில் திடீரென நுழைந்து குண்டுத் தாக்குதலை நடத்தினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் சிதறிக் கிடந்துள்ளது. அதேநேரம் காயமடைந்தவர்களில் 8 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர்கள் அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தாக்குதலையடுத்து வவுனியா ஊடான ஏ-9 வீதியில் பொதுமக்களின் போக்குவரத்தைத் தடை செய்த படையினர் சம்பவ இடத்தை உடனடியாகச்சுற்றி வளைத்துத் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர்.

குண்டுத் தாக்குதல் மற்றும் தீவிர தேடுதல்களால் வவுனியாவில் பெரும் பதற்றம் நிலவியது. (ச-5)


மின்பாவனையாளர்களே!

உங்கள் மின்சார கட்டணத்தை

30% முதல் 60% வரை

குறைக்க வேண்டுமா?

விபரங்களுக்கு :- Jaffna Technical Institute,
No. 45, Clock Tower Road,
Jaffna.
T.P. - 222 6434.

(c-1226)


## பிரிய அன்னை தாளின் கீழ் பெறுவீர் சாந்தி!



சிவத்தமிழ்ச் செல்வி

### தங்கம்மா அப்பாக்குட்டி

மண்ணதனில் சைவமதும் தமிழு மோங்க
மாபெரிய நூலகங்கள் பிரசங் கங்கள்
கண்ணனைய மகளிரது கல்யா ணங்கள்
கவின்நூல்கள் வெளியீடு மணிவி ழாக்கள்
உண்ணெகிழு திருமுறைகள் உரைபு ராணம்
உலகத்தி லோங்க நிதி உவந்தே ஈயும்
பெண்ணெனஇங் குலவிவந்த பெருமாட் டியே
பிரியஅன்னை தாளின்கீழே பெறுவீர் சாந்தி!

பாரைநனி புரந்துவரும் பரையின் கோவிற்
பாங்காக ஏதிலிகள் முதியோர் தங்கள்
சீரைநிதம் பேணவொரு கோவி லாக்கி
சிறப்பொடவர் வாழவழி வகுத்துத் தந்தீர்
காரைநகர் மக்களுளக் கனிவோ டீந்தே
கண்யமடை சிவத்தமிழ்ச் செல்வி யாளே
பேரையளி மண்ணிலிருந்து பிரியா விடைநீர்
பெருகிடவே உமக்கீந் தோம் பெறுவீர் சாந்தி!

க.கு.க. சிவபாலன் (K.K.K.)
அடியாருக்கு அமுதூட்டும் அண்ணலாளர்
களபூமி, காரைநகர்.

(C-1228)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி பண்டிதை கலாநிதி

### தங்கம்மா அப்பாக்குட்டி



அவர்களின்

மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். இவ் வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக நிதியுதவி அளித்தும் மற்றும் பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அன்னாரின் பணிகளை நினைவு கூருவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட வைத்திய அதிகாரியும்,
பணியாளர்களும்,
வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கமும்.

ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை.

(1350)

## கண்ணீர் அஞ்சலி



ஜனனம் 12 05 1927

மரணம் 15 06 2008

### திருமதி நாகபூரணி சிவராசா

(அவுஸ்திரேலியா)

அகவைகள் பல கண்டு
நிறை வாழ்வு எய்திய - தாயே
உனது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்
ஏரோ லங்கா நிறுவன ஊழியர்கள்
யாழ்ப்பாணம்.

(c-1229)

இப்பத்திரிகை வலம்புரி அஞ்/கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.